
பக்கங்கள்-16 | 01.தை.2023 | விலை–50.00






# தினப்புயல்

THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –396



## மாவிலாறு மஹிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?

## 2022 இலங்கை அரசியலின் எதிர்பாராத திருப்பங்கள்!

## விவசாயிகளின் தலையில் மண் அள்ளிப்போடும் வவுனியா அரச அதிபரும் அவரின் அடிவருடிகளும்

## 2023 பட்ஜெட் சொல்லும் செய்தி என்ன?

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-



# 2022 இலங்கை அரசியலின் எதிர்பாராத திருப்பங்கள்!

எம்மிடம் இருந்து விடைபெறும் 2022 ஆண்டுக்கு இலங்கை அரசியலைப் பொறுத்தவரை மிகப்பெரிய வரலாற்று முக்கியத்துவம் இருக்கிறது. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் விலைவாசி கடுமையாக அதிகரிக்கத்தொடங்கிய போது 'விலைவாசி எவ்வளவுதான் உயர்ந்தாலும், சகித்துக்கொண்டு சமாளிக்கும் சமூதாயமாக இலங்கை மக்கள் மாறிவிட்டார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. வெகுசனத்திடமிருந்து எந்த எதிர்ப்பையும் காணவில்லை' என்று சமூக ஊடகங்களில் ஆதங்கத்தை வெளியிட்ட பெருவாரியான பதிவுகளைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால், பொறுமையிழந்த மக்கள் மூன்று மாதங்களுக்கு பிறகு செய்யத்தொடங்கிய கிளர்ச்சி முழு உலகினதும் கவனத்தை இலங்கையை நோக்கி திரும்பவைத்தது. நாடு முன்னென்றும் கண்டிராத படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு காரணமான தவறான ஆட்சிமுறைக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக சுமார் நான்கு மாதங்களாக கொழும்பு காலிமுகத்திடலை பிரதான தளமாகக் கொண்டு நாடுபூராவும் மூண்ட மக்கள் போராட்டம் இலங்கையில் முதற்தடவையாக ஜனாதிபதி ஒருவரை நாட்டைவிட்டு வெளியேறவைத்தது.

தென்னிலங்கையில் மிகுந்த மக்கள் செல்வாக்குடைய அரசியல் தலைவராக விளங்கிய மஹிந்த ராஜபக்ஷ மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாமல் பிரதமர் பதவியை துறந்து, அலரிமாளிகையை மக்கள் முற்றுகையிட்ட நிலையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வெளியேறி திருகோணமலை கடற்படைத் தளத்தில் தஞ்சமடைய வேண்டி வந்தது. **இராணுவப் பின்புலத்துடன் மிகவும் பலம்பொருந்திய ஜனாதிபதி என்று நோக்கப்பட்ட கோட்டபாய ராஜபக்ஷ நாட்டின் அரசியல் வரலாற்றில் பதவிக்காலத்தின் இடைநடுவில் பதவிவிலகிய முதல் ஜனாதிபதி என்றும் மக்கள் கிளர்ச்சியினால் பதவிவிலக நிர்ப்பந்திக்கப்பட்ட முதல் ஜனாதிபதி என்றும் மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் நாட்டை விட்டு வெளியேறிய முதல் ஜனாதிபதி என்றும் பல வரலாற்று 'முதல்களை' தனதாக்கிக்கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை ஆரம்பிக்க ஒரு சில வருடங்களில் அதை நாட்டின் மிகப்பெரிய கட்சியாக விளங்கவைத்த 'அரசியல் மதியூகி' என்று வர்ணிக்கப்படும் பசில் ராஜபக்ஷ நிதியமைச்சர் பதவியை மாத்திரமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறக்கவேண்டி வந்தது.** ராஜபக்ஷர்கள் 2019 நவம்பரில் மீண்டும் ஆட்சிக்கு வந்த போது இன்னொரு இருபது வருடங்களுக்காவது அவர்களது ஆட்சியை அசைக்கமுடியாது என்று கூறிய அரசியல்வாதிகளும் அவதானிகளும் இருந்தார்கள். ஆனால், இரண்டரை வருடங்களுக்குள்ளாக ராஜபக்ஷர்கள் கூண்டோடு பதவிகளில் இருந்து விரட்டப்பட்டார்கள். மக்கள் கிளர்ச்சி படைபலம் கொண்டு ஒடுக்கப்பட்ட பிறகு அவர்கள் மீண்டும் அரசியல் செயற்பாடுகளில் தற்போது ஈடுபடத்தொடங்கியிருந்தாலும், முன்னைய மிடுக்குடன் இல்லை. மீண்டும் அமைச்சரவையில் இடம் பிடிப்பதற்கான அவர்களின் பிரயத்தனம் இன்னும் வெற்றி பெறவில்லை. இலங்கை அரசியல் கடந்த காலத்திலும் குறிப்பிட்ட சில உயர்வர்க்க குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்தது. ஆனால், ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்தது போன்று அந்தக் குடும்பங்களுக்கு எதிராக மக்கள் ஒரு போதும் வீதியில் இறங்கியதில்லை. ஆட்சிமுறையின் தவறான போக்குகள் சகலவற்றையும் உருவகிப்பவர்களாக விளங்கும் ராஜபக்ஷர்கள் தங்கள் அரசியல் எதிர்காலம் குறித்து மிகுந்த ஐயம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களை அதிகாரத்தில் இருந்து விரட்டிய அரசியல் புரட்சியொன்றின் பரிமாணத்தை எடுத்த மக்கள் கிளர்ச்சியைப் போன்ற ஒன்றை தெற்காசியா ஒருபோதும் கண்டதில்லை.

அதேவேளை, இலங்கை இவ்வருடம் அரசியலில் வேறு பல விசித்திர நிகழ்வுகளையும் சந்தித்தது. **கடந்த பொதுத்தேர்தலில் ஒரு ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடியாமல் தேர்தல் வரைபடத்தில் இருந்து துடைக்கெறியப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடளாவிய ரீதியில் கட்சிக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் பெறக்கூடியதாக இருந்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தைப் பயன்படுத்தி காலந்தாமதித்து நாடாளுமன்றத்துக்கு வந்து பிறகு பிரதமராகி இறுதியில் 134 உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாகவும் தெரிவானார். இலங்கையில் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின் மூலம் முதன் முதலாக ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவர் அவரே. நாடாளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்தைக் கொண்டிருக்கும் கட்சியொன்றின் தலைவர் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவாவது உலகில் வேறு எங்கும் நடந்திருக்க முடியாது.** கொள்கை விவகாரத்தைப் பொறுத்தவரை தன்னுடன் முற்றிலும் முரண்பாட்டைக் கொண்ட ஒரு கட்சியின் நாடாளுமன்ற பலத்தில் அரசாங்கத்தை நடத்தும் முதன் முதலான ஜனாதிபதியாகவும் விக்கிரமசிங்க விளங்குகிறார். இதுவும் கூட வேறு எங்கும் நடந்திருக்க முடியாது. மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க முடியாமல் பதவியில் இருந்து இறங்கிய அரசாங்கத்தின் உறுப்பினர்களே பெரும்பாலும் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையிலும் இருக்கிறார்கள். தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு பொதுஜன பெரமுன பொறுப்பல்ல என்று பசில் ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் கூறியதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆளும் கட்சி பொறுப்பல்ல என்று கூறப்படுவதும் இதுவே முதற்தடவையாகும். இதுவும் இலங்கையில் தான் நடக்க முடியும்.

## வங்குரோத்து நிலை

இது இவ்வாறிருக்க, வெளிநாடுகளிடமும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமும் பெற்ற கடன்களை தவணை தவறாமல் திருப்பிச்செலுத்த முடியாதளவுக்கு பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது என்று இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக இவ்வருடமே பிரகடனம் செய்யப்பட்டது. பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கவேண்டியிருக்கும் கடனுதவியை முற்றுமுழுதாக நம்பியே செயற்பாடுகளை முன்னெடுக்கிறது. கடந்த செப்டெம்பர் முதலாம் திகதி நாணய நிதியத்துடன் காணப்பட்ட அலுவலர்கள் மட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் விரிவுபடுத்தப்பட்ட கடனுதவியாக 48 மாத காலப்பகுதியில் 290 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைக்க வேண்டும். ஆனால், தவணைக் கடன்களை திருப்பிச்செலுத்த முடியாத நிலையில் இருக்கும் இலங்கை கடனுதவிகளை பெற்ற நாடுகளுடன் குறிப்பாக சீனா, இந்தியா, ஜப்பான் கடன் மறுசீரமைப்பு ஏற்பாடுகளை வெற்றிகரமாக செய்து கொண்டால் மாத்திரமே அந்தக் கடனுதவி கிடைக்கும். அது மாத்திரமல்ல, அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது உட்பட பெருவாரியான நிபந்தனைகளையும் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடை முறைப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் ஏற்கெனவே முன்னெடுத்து வருகிறது. 2023 பட்ஜெட்டும் நாணய நிதியத்தின் யோசனைகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டது.

வெளிநாடுகளுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அரசாங்கத் தரப்பில் அடிக்கடி கூறப்படுகின்ற போதிலும், நாணய நிதியத்தின் கடனுதவியை விரைவாக பெறக்கூடிய சாத்தியத்தைக் காணவில்லை. இந்த மாத இறுதியில் அந்த உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது அடுத்த வருடம் மார்ச் மாத இறுதியில் கிடைக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாக நம்பப்படுகிறது. நாணய நிதியம் உறுதியளித்துள்ள உதவி, பொருளாதார நெருக்கடியின் கடுமையை தணிக்க இவ்வருடம் இந்தியா தொடர் கடனாக வழங்கிய உதவியையும் (400 கோடி டொலர்கள்) விட குறைவானதாகும். அதுவும் அந்த உதவி நான்கு வருடகாலப் பகுதியில் 8 தவணைகளிலேயே வழங்கப்படும். நிபந்தனைகள் நிறைவேற்றப்படுகின்ற போக்கைப் பொறுத்தே அந்த கொடுப்பனவுகள் அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதனால் நாணய நிதியத்தின் உதவியில் பெரிதாக கொண்டாடுவதற்கு எதுவுமில்லை. பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. 2 கோடி 20 இலட்சம் இலங்கையர்களில் சுமார் 62 இலட்சம் பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக உலக உணவு மற்றும் விவசாய நிறுவனம் கடந்தவாரம் அறிவித்தது. உணவுப் பொருட்களை வாங்க இயலாததால் இரு குடும்பங்களில் ஒன்று சமாளிக்கும் வழிமுறைகளை தற்போது கடைப்பிடிக்கின்றன.

சனத்தொகையில் 40 சதவீதமானவர்கள் வாழ்வாதாரங்களுக்காக விவசாயத்தை நம்பியிருக்கின்ற போதிலும், தற்போதைய பல்பரிமாண நெருக்கடி தேசிய உணவு முறைமையை சீர்குலைக்கும் ஆபத்து இருக்கிறது என்று அந்த நிறுவனம் அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. 23 இலட்சம் சிறுவர்கள் உட்பட 57 இலட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்களுக்கு அவசர மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது என்று யூனிசெப் அறிக்கை தெரிவிக்கிறது. உலகில் மிகவும் கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கும் முதல் பத்து நாடுகளில் இலங்கையும் அடங்குகிறது தெற்காசியாவில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. மறுவார்த்தைகளில் கூறுவதானால், பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடியைப் பொறுத்த வரை, எமது பிராந்தியத்தில் இலங்கை ஆப்கானிஸ்தானுடன் 'கூட்டாளியாக' விளங்குகிறது. கடுமையான விலைவாசி அதிகரிப்பு காரணமாக பெரும்பாலான மக்களினால் வழமையான உணவு வகைகளை வாங்க முடியாமல் இருக்கிறது. ஒரு வேளை அல்லது இரு வேளை உணவைத் தவிர்க்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும்



அடுத்த நாள் உணவு எங்கிருந்து வரும் என்ற ஏக்கத்துடன் சிறுவர்கள் பசியுடன் படுக்கைக்கு செல்கிறார்கள் என்றும் யூனிசெப் கூறுகிறது. மக்கள் பெரும் எண்ணிக்கையில் நாட்டைவிட்டு வெளியேறுவது பொருளாதார நெருக்கடியின் விளைவான இன்னொரு பிரச்சினையாகும். இவ் வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் 113,140 இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கிறார்கள். கடந்த வருடம் இதே காலப்பகுதியில் நாட்டை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கையுடன் (30,797 பேர்) ஒப்பிடும் போது இது கடுமையான அதிகரிப்பாகும். மூளைசாலிகள் வெளியேற்றமும் தீவிரமடைந்திருக்கிறது. இதன் விளைவான பாதிப்புக்களை பற்றி சிந்திக்காமல் அரசாங்கமும் மக்கள் வெளியேற்றத்தை ஊக்குவிக்கும் கைங்கரியங்களில் ஈடுபடுகிறது. வெளிநாட்டு வேலைக்கு செல்லவிரும்பும் அரச ஊழியர்களுக்கு ஐந்து வருட காலத்துக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படுகிறது. இவ்வாறாக பெருவாரியான பிரச்சினைகளை இலங்கைக்கு தந்த 2022 விடைபெறவிருக்கும் அதேவேளை புதிய வருடம் நெருக்கடிகளில் ஓரளவேனும் தணிவை ஏற்படுத்தக்கூடிய மாறுதல்களை கொண்டு வரும் என்று நம்பிக்கை வைக்கவும் முடியாமல் உள்ளது. அடுத்த வருடம் பாரிய உணவுத்தட்டுப்பாடு ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கிறது என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க அபாயசங்கு ஊதிக்கொண்டிருக்கிறார். மின்கட்டணங்களை மீண்டும் அதிகரிக்காவிட்டால் நாடு பல மணி நேர மின்வெட்டைச் சந்திக்க வேண்டி வரும் என்றும் எச்சரிக்கப்படுகிறது. வேறு பல சேவைகளின் கட்டணங்களும் அதிகரிக்கப்படலாம்.

மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை அரசியல்வாதிகள் குறிப்பாக ஆளும் கட்சி அரசியல்வாதிகள் தங்களது போக்கில் எந்த மாற்றத்தையும் காட்டுவதாக இல்லை. 'அறகலய' மக்கள் கிளர்ச்சிக்குப் பின்னரான காலகட்டத்தில் நிலவரங்கள் முன்னரைப் போன்று இருக்கப்போவதில்லை தங்களை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கும் மக்கள் பற்றி எச்சரிக்கையுணர்வுடனேயே அரசியல்வாதிகள் செயற்படவேண்டியிருக்கும் என்று அவதானிகள் கூறினார்கள். ஆனால், மக்கள் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டு அதன் முன்னரங்கத்தில் நின்ற செயற்பாட்டாளர்களை அரசாங்கம் தொடர்ந்து வேட்டையாடுவதை அடுத்து தோன்றியிருக்கும் சூழ்நிலை தங்களது பழைய போக்கிற்கு திரும்புவதற்கு அரசியல்வாதிகளுக்கு ஊக்கம் கொடுத்திருக்கும் துரதிர்ஷ்டவசமான நிலைமையை காண்கிறோம்.

**வீரகத்தி தனபாலசிங்கம்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## தமிழினத்தை வைத்தே தமிழினத்தை அழிக்கும் அரசாங்கத்தின் சூழ்ச்சி

தமிழின போராட்ட வரலாற்றில் அரசியல் ரீதியாக த.தே.கூட்டமைப்பின் பங்களிப்பு என்பது அளப்பறியது. அதனை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் அன்றிலிருந்து இன்று வரை செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இவ்விடயம் தொடர்பாக தீவிரம் காட்டி வருகின்ற நிலைமையும் உருவாகியுள்ளது. 22 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டு த.தே.கூ யுத்தம் நிறைவடைந்து 13 ஆண்டுகளுள் 12 ஆசனங்களை இழந்து நிற்கின்றது என்பது கவலைக்குரிய விடயமே. சுருக்கமாக சொல்லப்போனால் த.தே.கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் மறைந்த ஊடகவியலாளர் சிவராமின் பங்கு அளப்பரியது.

தேசியத்தலைவர் பிரபாகனின் வழிநடத்தலின் கீழ் தொடர்ந்தும் பரிணாமித்து வருகின்ற த.தே.கூட்டமைப்பை மக்களிடையே இருந்து பிரித்துவிடும் நோக்கில் தமிழ் இனத்தை வைத்தே தமிழினத்தை அழிக்கின்ற ஒரு செயற்பாடாக தற்பொழுது அரசாங்கம் களமிறங்கியுள்ளது. இதில் குறிப்பாக த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணி இரண்டும் சில பல காரணங்களுக்காக த.தே.கூட்டமைப்பிலிருந்து ஓரங்கட்டப்பட்டது. அதுமட்டுமன்றி தமிழ் தேசியம் பேசிய த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச தரப்பினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார் என்பது வரலாறு.

இது இவ்வாறிருக்க த.தே கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கட்சிகளும் அரச ஒட்டுண்ணிகளாக செயற்படுகின்ற கருணா பிள்ளையான் வியாழேந்திரன் ஈ.பி.டீ.பி போன்றவர்களும் அரசாங்கத்துடன் இணைந்து கூட்டமைப்பை பிளவுபடுத்த தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். தாங்களும் மக்கள் பிரதிநிதி என்று கூறிக்கொண்டு கடந்தகாலத்தில் கொலை. கொள்ளை. கற்பழிப்பு போன்ற விடயங்களில் ஈடுபட்டு தாயகம்.தேசியம் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை சிதைத்து இன்று அரசாங்கத்துடன் தமது சலுகைகளுக்காக செயற்பட்டு வருகின்றமை வேதனைக்குரிய விடயமே. அரசாங்கத்துடன் இணைந்து தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும் என்பது இவர்களது நப்பாசை. கடந்த காலங்களில் அரச ஒட்டுண்ணிகளாக செயற்பட்ட இவர்களையும் தீவிரவாதிகள் என்ற கண்ணோட்டத்திலே அவர்கள் பார்த்து வந்தார்கள்.

தமிழ் மக்களுக்கான உரிமைப்போராட்டம் என்பது தெரிந்தும் தமது சுகபோக வாழ்க்கைக்காக தமிழினத்தை காட்டிக் கொடுக்கின்றவர்களாகவும் தமிழர் உரிமைப்போராட்டங்களை மழுங்கடிப்பவர்களாகவும் இவர்கள் செயற்படுகின்றார்கள். இவர்களே தமிழீழ போராட்டத்தை பயங்கரவாதம் என அரச தரப்பிற்கு எடுத்து வைத்தவர்கள். இவர்களது பிரச்சாரங்கள் எல்லாம் த.தே.கூட்டமைப்பு மக்களுக்கு இதுவரை என்ன செய்தது அல்லது என்ன செய்து கொண்டிருக்கின்றது என்பதேயாகும். தமிழ் மக்களுக்கு எதிராக விரும்பியோ விரும்பாமலோ 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யூலைக்கலவரம் இன்று வரை மறைமுகமான ஒரு இன அழிப்பாக தொடர்கின்றது. குறிப்பாக வடகிழக்கில் நிலங்களும்.வளங்களும் சுரண்டப்படுகின்றன. தாயகம். தேசியம் . சுயநிர்ணய உரிமைபோன்றவை மறுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு மறுக்கப்பட்டு வரும் இந்த நிலையில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கக்கூடிய தமிழ் தேசிய கூட்டமைப்பையும் அதில் அங்கத்துவ கட்சிகளாக செயற்படுகின்ற ரெலோ. புளொட். தமிழரசுக் கட்சி இந்த மூன்றையும் பிளவுபடுத்தி விட்டால் ஆளுங்கட்சியிலும் எதிர்கட்சியிலும் மாத்திரமே அங்கம் வகிக்கும் ஒரு நிலை மாற்றம் பெறும். அதனோடு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் கட்சிகளில் இருந்து விலகி அரச தரப்போடு இணைந்து செயற்படும் கட்சிகளாகவே இவர்கள் இருப்பார்கள். அதனையே அரசாங்கம் விரும்புகின்றது. எனவே அரசாங்கத்தின் சூழ்ச்சிகளை அறிந்து தமிழினம் எமது இனத்தை காப்பாற்ற அயராதுபாடுபட வேண்டும் என்பதே இன்றைய யதார்த்தம்.

# 201 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



### சுடுதல்

ஏ.கே. - 74 இன் தொழினுட்பச் சூட்டு வேகம் மிகவும் உயர்ந்ததாகும். முப்பது ரவைகளைக் கொண்ட ரவைக்கூடு ஒரு தொடர் சூட்டின் போது 3 செக்கன்களில் சுட்டு முடிக்கப்படுகின்றது. 45 ரவைகளைக் கொண்ட ரவைக்கூடு - 4.5 செக்கனிலாகும். ஆகவே தான் அனுபவமிக்க சூட்டாளர்கள் சமரில் பாதுகாப்பு நெம்பை ஒற்றைச் சூட்டில் விடுகின்றதுடன் ஒவ்வொரு சூட்டின் பின்பும் குறிகாட்டிகளின் சீர்த்தன்மையைச் சோதித்துத் தனித்தனிச் சூடுகளாகவும் சுடுகின்றார்கள். சூட்டு வேகம் இதன் போது கூடுதலான அளவு பேணப்படுகின்றதுடன் தானியங்கிச் சூட்டோடு ஒப்பிடுகையில் சராசரி மோதுகை மிகவும் உயர்ந்ததாகவும் இருக்கின்றது. தொடர் சூட்டின் குறைபாட்டைப் புரியவைப்பதற்காக இன்னொரு எடுத்துக்காட்டைக் கூறுகின்றேன்.

1995 ஆம் ஆண்டு ஜனவரியில் 81 வது கவசமயமாக்கப்பட்ட டிவிசன் குறோஸ்னியில் முற்றுகைக்குள்ளாகி இருந்தது. இதன் ஆளணிகளில் ஒரு பகுதி புகையிரத நிலையக் கட்டடத்தில் தற்காப்பு நிலையெடுத்திருந்தது. நிலையத்தைத் தாக்கிக்கொண்டிருந்த செச்னியப் போராளிகள் கட்டடத்தை நோக்கி ஓடிச்சென்று யன்னல் துவாரங்களில் பாய்ந்தேறினார்கள். யன்னல் கீழ்த்தட்டுக்களில் நின்ற படி கட்டடத்திற்குள் சுடுகலனை நீட்டி ஒரு ரவைக்கூட்டு ரவையைத் தொடர் சூட்டில் சுட்டுத்தீர்த்து விட்டு குதித்து வீதிக்கு ஓடிச்சென்றனர். மீள ரவைக்கூட்டை மாற்றிவிட்டு யன்னலில் ஏறி தற்காப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு எதுவித சேதாரமும் ஏற்படாவண்ணம் கட்டடத்திற்குள் சுட்டனர். இந்தப் பாயும் வண்டுகளுடன் எங்களது படைவீரர்களும் தீவிரச் சமர் புரிந்தனர். ஆனாலும் குறித்த வெற்றியெதனையும் எட்டவில்லை. இருந்த போதும் சில சமயங்களில் நீண்ட தொடர் சூடுகளை மேற்கொள்வது மிகவும் பொருத்தமானதாகவும் இருக்கின்றது. அதாவது போர்வீரனின் முன்னால் மிக நெருங்கிய இடைவெளியில் திடீரெனச் சில போராளிகள் எதிர்ப்படுகின்ற சந்தர்ப்பங்களிலாகும். எடுத்துக்காட்டாக 'செச்சென் - அவுல்' கிராமப் பகுதியில் வேவுக்குழு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது. முன்புல வேவு அணியிலிருந்து ஒரு வீரன் விலகிச்சென்று பதுங்குகுழி ஒன்றினுள் நுழைந்தான். அதனுள்ளே நான்கு போராளிகள் இருந்தனர். அவர்கள் இன்னமும் வீரனைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் எக்கணத்திலும் அவர்கள் வீரனைக் கண்டுகொள்ளக்கூடும். வீரன் பதுங்குகுழிக்குள் தொடர் சூட்டினால் ஒரு பூரண ரவைக்கூட்டைச் சுட்டு முடித்தான். விளைவாக நான்கு போராளிகளையும் கொன்றிருந்தான். இவ்வாறான சமயங்களில் குறிபொருத்துவதற்கு நேரம் கிடைப்பதில்லை.

ஆனால் முன்குறிகாட்டி மற்றும் பின்குறிகாட்டியைப் பயன்படுத்தாமல் ஓரளவு சுடுகுழலைக் கொண்டு சுடலாம். ஏ.கே. - 74 சுரிசுடுகலன் தன்னியக்கச் சூட்டின் போது சுடுகலனை வலதுபக்கமாக மேல் நோக்கி இழுத்துச் செல்கின்றது. ஆகவே மிக அருகிலிருக்கின்ற இடது பக்க இலக்கிலிருந்து சூட்டை ஆரம்பிப்பது விரும்பத்தக்கது. மக்கள் வாழ்விடங்கள், காட்டுப் பிரதேசங்கள், மலைப்பிரதேசங்கள் போன்ற இடங்களில் சமர் நடவடிக்கையை மேற்கொள்கின்ற போது எதிரியை அருகருகே சந்திக்கின்ற சந்தர்ப்பங்கள் தோன்றும் சாத்தியம் எப்பொழுதும் மிக உச்சமாகும். இதன் போது வீரன் பிரதான குழுவிடம் அல்லது மறைப்பிற்குச் செல்லவேண்டிய தேவையேற்படலாம். இந்நேரத்தில் அவனுக்கு எவராலும் காப்பு வழங்கமுடியாது. எதிரிமீது சூட்டை மேற்கொண்டபடி புறமுதுகு காட்டியபடி ஓடுதல் வசதியற்றதாகும். ஏனெனில் இதன்போது துல்லியச் சூடுகள் என்பது இருக்கமாட்டாது.

மேலே குறிப்பிட்ட 1 ஆவது அல்லது 2 ஆவது முறையில் ஆயுதம் வைத்திருக்கப்படுமானால் ஓடும்போது பின்னோக்கிச் சுடுகலனால் சுடும்போது சுடுகலன் ஓடுவதற்கு மிகவும் வசதியானதாக இருக்கின்றது. இந்நிலையில் வலது கையால் சுடுகலனடியை அசைப்பதன் மூலம் ஓரளவு சுடுகலனை இடது வலது மற்றும் மேலும் கீழும் அசைக்கக்கூடியதாக இருக்கும். இது குறிபொருத்திய சூடாக இல்லாதபோதும் குறைந்த இடைவெளியாக இருக்கின்றபடியால் எதிரியைக் காப்பைத்தேடி ஓட நிர்ப்பந்திக்கின்றது.

இலக்கு மிகநெருங்கிய இடைவெளியில் (ஒன்று. இரண்டு காலடிகளில்) தோன்றுகின்றதென்றால்? அதாவது முன்புல வேவுவீரன் அல்லது ரோந்துவீரன் நெருக்கமாக ஒரு போராளியைச் சந்தித்துக்கொண்டானென்றால் அவனுக்குக் கைச்சண்டை அல்லது கத்திச்சண்டை அறிவே உதவிசெய்யக்கூடும். ஆனால் உங்களுக்கு முன்னால் எதிரியொருவன் உங்களது சுடுகலனைப் பற்றிப்பிடித்தபடி நிற்பானானால் அதற்கும் மேலாக அவனிலிருந்து ஒன்றிரண்டு காலடிகளில் இன்னமும் 2 - 3 போராளிகள் நிற்பார்களானால்? இவ்வாறான சூழ்நிலைகளுக்காகவென நெருங்கிய சண்டைக்கான துணை ஆயுதத்தை (பிஸ்ரலை) உங்களுடன் அவசியம் வைத்திருக்க வேண்டும்.

சூட்டாளன் ஆயுதமாகச் சுரிசுடுகலனையும் அதனுடன் சேர்த்து பிஸ்ரலையும் வைத்திருப்பானானால் அவன் வேகமாக அதனைப் (பிஸ்ரலைப்) பயன்படுத்தக்கூடியவனாக இருப்பான். கண்பார்வைக்குப் பிஸ்ரல் தெரியாவண்ணம் மாத்திரமே அதனை அணிந்திருக்கவேண்டும். மறைப்பாகப் பிஸ்ரல் வைத்திருப்பதன் நன்மை பற்றிப் புரிந்துகொள்வதற்காக இரண்டு எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடுகின்றேன்.

இவ்விரண்டு சம்பவங்களும் தஜிகிஸ்தான் குடியரசில் நடந்தவையாகும். முதலாவது சம்பவத்தின் போது காவல் நிலைகளைச் சோதித்துவிட்டு அதிகாரியொருவர் வீரனொருவனின் காவல் துணையுடன் முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார். இருவரும் ஆயுதம் தரித்திருந்தனர் (அதிகாரியின் ஆயுதம் மார்பில் தொங்கவிடப்பட்டதாகவும் வீரனின் தோளிலும் இருந்தது). அதிகாரி இதுதவிர ரவையேற்றப்பட்டு பாதுகாப்பு நிலையில் விடப்பட்ட பிஸ்ரல் ஒன்றையும் வைத்திருந்தார். அதனை அவர் 'இடுப்புப்பட்டி ஏ' என அழைக்கப்படுகின்ற (இராணுவத்தில் இதனை மார்புக்காப்பு அல்லது மார்புக்கச்சை எனவும் அழைக்கின்றனர்) கோல்சரினுள் வலது பக்கத்தில் வைத்திருந்தார்.

முகாமை நெருங்கிக்கொண்டிருக்கின்ற போது எங்களின் இராணுவப் படையாட்களுடன் இரண்டு ஆயுதந்தரித்த இஸ்லாமியப் போராளிகள் முட்டுப்பட்டனர். ஒரு போராளி அதிகாரிக்கு முன் நின்றுகொண்டு 'எங்கிருந்து வருகின்றாய் ஏன் போயிருந்தாய்?' என்ற பேச்சைத் தொடங்கினான். இரண்டாவது போராளி சற்றுத்தள்ளிச் சென்று அதிகாரிக்குப் பக்கவாட்டாக நின்றான். போர்வீரனும் இந்நேரத்தில் பக்கவாட்டிற்குச் சென்று அதிகாரியை அவனிலிருந்து மறைத்துக்கொண்டு நின்று தனது ஆயுதத்தைச் சுடுவதற்கேற்பத் தயார்ப்படுத்தினான். பக்கவாட்டாக நின்ற போராளி தனது ஆயுதத்தின் பாதுகாப்பு நெம்பைச் சூட்டு நிலைக்கு (முக்கிவிடும் சத்தம் கேட்டது) முடுக்கிவிட்டான். அடுத்த போராளி அதிகாரிமீது பாய்ந்து அவரது ஆயுதத்தைப் பறிக்க முயற்சித்தான். அதிகாரி தனது கோல்சரினூடாகவே அவனைப் பிஸ்ரலால் சுட்டார். இரண்டாவது சூட்டில் (கிட்டத்தட்ட தனது சக போர்வீரனும் சுட்டநேரத்தில்) தோள்மூட்டில் சுடுகலனைப் பொருத்த முயற்சித்த அடுத்த போராளியைச் சுட்டார்.

இரண்டாவது சந்தர்ப்பத்தில் இரண்டு ஸ்பெற்னாஸ் அதிகாரிகள் சிறிய கடையொன்றிற்குச் சென்றனர். அவர்கள் ஆயுதங்களாகப் பிஸ்ரல்களை வைத்திருந்தனர். அவை கோல்சரில் வைக்கப்பட்ட நிலையில் இடுப்பில் தொங்கியபடி இருந்தன. அதிகாரிகள் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த தட்டுக்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது கடைக்குள் 7 போராளிகள் நுழைந்தனர். இவர்களில் ஒருவன் சுரிசுடுகலனை வைத்திருந்தான்.

ஒரு போராளி கைகளை மேலே உயர்த்தும்படி கட்டளையிட்டான். இவ்வாறான நிலையில் ஆயுதத்தை இரகசியமாக எடுக்க முயற்சிப்பது தெரிந்துவிடுவதோடு தலைக்குமேலால் தன்னியக்கச் சூடுகள் பறந்து இதனைத் தடுத்து நிறுத்தியும் விடும். போராளிகள் அதிகாரிகளின் ஆயுதங்களைக் களைந்ததோடு ஒருவரைச் சுடுகலனடியால் தலையில் தாக்கி விழுத்தினர். கடையிலிருந்து வேகமாகப் பாய்ந்தோடித் தமது வாகனத்தில் ஏறித் தப்பிச்சென்றுவிட்டனர். முதலாவது சம்பவத்தில் ஆயுதத்தை மறைப்பாக வைத்திருந்தமை எதிரியைக் கொல்ல உதவியது. இரண்டாவது சம்பவத்தில் - திறந்தபடி வைத்திருந்தமை குற்றவாளிகளை ஆயுதங்களைக் கைப்பற்றும் நடவடிக்கைக்குத் தூண்டியுள்ளதுடன் வெற்றிகரமாகப் பிஸ்ரலைப் பயன்படுத்த முடியாத நிலைக்கும் தள்ளிவிட்டுள்ளது.

மிகவும் உயிராபத்துக்கூடிய சண்டையிடங்களில் இரண்டுரவைக்கூடுகளை ஒன்றாகக் கட்டிவைத்திருக்கின்ற சில 'கண்டிப்பான' வீரர்களைக் கூடுதலாகக் காணலாம். இம்முறையில் ரவைக்கூட்டை வைத்திருக்கின்ற விடயத்தைப்பற்றிஎச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். அதிகமாகச் சுடும் போது வீரர்கள் ரவைக்கூட்டைத் தரையில் ஆதாரப்படுத்துகின்றார்கள். இதன்போது கீழ்நோக்கியவாறிருக்கின்ற ரவைக்கூட்டின் ரவையேந்தல் பகுதிக்குள் மண் சேர்ந்துகொள்கின்றது. இது சூட்டின்போது ஏற்படுகின்ற இயங்குநிலைத் தடைக்குக் காரணமாகின்றது. சமர்ச் சூழ்நிலையில் இவ்வாறான இயங்குநிலைத் தடைக்காக நீங்கள் உங்களது உயிரைக் கொடுக்கவேண்டியவர்களாகவும் இருக்கலாம். சண்டை ஆயுதத்தால் சூட்டை மேற்கொண்ட சகலரும் 'ரவையறைப் பரிசோதனை சுடுகலன் பார்வைக்கு விடு' என்ற கட்டளைக்கு அறிமுகமானவர்களாக இருப்பீர்கள்.

**தொடர்வான்....**

# விவசாயிகளின் தலையில் மண் அள்ளிப்போடும் வவுனியா அரச அதிபரும் அவரின் அடிவருடிகளும்

## வவுனியா மாவட்ட கமக்கார ஒழுங்கமைப்பு சம்மேளத்தின் தலைவர் செல்லத்தம்பி ஸ்ரீதரன் அதிரடி!



**கேள்வி : இன்றைய விவசாயத்தின் நிலைமை எப்படியிருக்கின்றது?**

பதில் : இன்றைய விவசாயத்தின் நிலைமை உண்மையில் எப்படியிருக்கின்றது என்றால் விவசாயிகளை திட்டமிட்டு புறக்கணிப்பதான நிலைப்பாடாகத்தான் நான் கருதுகின்றேன். ஏன் என்றால் கடந்தகால சிறுபோகத்தை பார்த்தால் 15.150 ஏக்கர் வவுனியா மாவட்டத்தில் சிறப்பாக அமைந்தது. அந்த சிறுபோகத்திற்கான உரம் 40. 45 ஆயிரத்திற்கு உரத்தை வாங்கிப்போட்டு விவசாயிகள் சிறந்த அறுவடையை பெற்றார்கள். ஆனால் அறுவடைக்காலத்தில் எரிபொருள் (டீசல்) 1000 ரூபாய்க்கு வாங்கி வெட்டு அறுவடையை செய்வதற்குரிய கூலியாக 20 ஆயிரம் ரூபாய் ஏக்கருக்கு கொடுக்கப்பட்டது. 20 ஆயிரம் மட்டுமல்ல 22 ஆயிரம் வரையும் போனது. எனவே இந்த விவசாயிகள் எப்படி இலாபம் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கும். இந்த நிலைமையில் தாராளமாக வழமை போன்று தான் டீசல் வவுனியாவிற்கு வந்து கொண்டிருந்தது.

ஆனால் குறிப்பிட்ட அரச அதிகாரிகள் அந்த டீசல் விநியோகத்தை தரம்பட தருவதற்கு தடையாக இருந்தார்கள். நான் டீ.எஸ் கூட்டத்தில் கூட கடுமையாக பிரச்சனைப்பட்டு அரச அதிபர் உட்பட எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை. அந்த நிலைமையில் இறுதியாக நாங்கள் விவசாய அமைப்புக்கள் ஊடாக டீசலை வாங்கி அறுவடையை இலகுவாக்குங்கள் என்று சொன்ன போதும் கூட வரிசையில் நிறுத்தப்பட்ட கனரக வாகனங்களுக்கு அந்த நேரம் உண்மையில் விவசாய துறையை தவிர்ந்து ஏனைய எந்த துறைகளுக்கும் செய்யப்படாத நிலையில் விவசாயிகளுக்கு டீசலை பகிர்ந்தளிப்பதற்கு தடையாக இருந்தார்கள். வவுனியா மாவட்டத்தை பொறுத்த வரையில் அரச அதிபர் உட்பட இதற்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள். எங்களுடைய அரசியல்வாதிகளுக்கு நாங்கள் தொடர்பு மேற்கொண்ட பொழுதும் கூட எந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு துணை நிற்கவில்லை. ஆனால் நாங்கள் மிக கடுமையாக போராடி 1 இலட்சம் லீட்டர் டீசலை பெற்றோமே தவிர எங்களுக்கு தேவைப்பட்ட டீசலின் அளவானது 2 இலட்சத்து 25 ஆயிரம் லீட்டர் டீசலாகும். எனவே இப்படியாக அரசாங்கம் சரியாக நடந்தாலும் இங்கிருக்கும் அரச அதிகாரிகள் விவசாயிகளுக்கு ஆதரவாக இல்லை என்பது தான் எனது கருத்து.

**கேள்வி : அதற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள் பிரதேச வேறுபாடா அல்லது என்ன காரணம்?**

பதில் : இந்த அரச அதிகாரிகளை பொறுத்தவரையில் விவசாயம் சம்மந்தப்பட்டவர்கள் இல்லை. அடுத்த பெரிய குறைபாடு இந்த அரச அதிபருக்கு தமிழ் தெரியாது. எங்களுக்கு சிங்களம் தெரியாது ஒரு பெரும்பான்மையாக தமிழ் பேசும் மக்கள் வாழக்கூடிய இடத்திலே தமிழ் தெரியாத ஒரு அரச அதிகாரியை வைத்துக்கொண்டிருப்பது மிக அசாதாரணமான விசயம் அல்லவா?

**கேள்வி : அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது குறிப்பாக விவசாயத்துறை வவுனியா மாவட்டத்திலே பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று கூறுகின்றீர்கள் அதே நேரம் பலர் டீசலைப்பெற்று மண்ணெய்ணெயை பெற்று தமது கமத்தை செய்வதாக அரசாங்க அதிபரிடம் கூறியிருக்கின்றார்களே அப்படியாக இருந்தால் நீங்கள் அவர்கள் மீது குற்றச்சாட்டாக சுமத்துகின்றீர்களா?**

பதில் : என்னவென்றால் விவசாயத்தை செய்திருப்பதாக நீங்கள் கூறிய கருத்தை நான் மறுதளிக்கின்றேன். காரணம் என்னவென்றால் அந்த காலப்பகுதியிலே அறுவடை தான் மிக முக்கியமாக இருந்தது. 15.150 ஆயிரம் ஏக்கர் இருந்த நிலையில் எங்களுக்கு வேறு எந்த தோட்டமும் இருக்கவில்லை. ஏனென்றால் உதாரணமாக அந்தகாலகட்டத்தில் மேட்டு நில பயிர்ச்செய்கைக்கு டீசல் இயந்திரங்களை பாவிக்கக்கூடிய நிலைமை இருக்கவில்லை. ஆனால் தற்பொழுது பலர் மாறிவிட்டார்கள். அந்த நிலைமையில் மண்ணெண்ணெய் தான் பாவிக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் அந்த காலகட்டத்தில் எங்களுக்கு தேவைப்பட்டது இந்த அறுவடைக்குரிய டீசல் அந்த அறுவடைக்குரிய டீசலை இந்த அரசாங்க அதிபரோ அல்லது மேலதிக அரசாங்க அதிபரோ எங்களுக்கு துணையாக நிற்கவில்லை என்பது தான் என்னுடைய கூற்று

**கேள்வி : அவ்வாறெனில் நீங்கள் அண்மையிலே ஒரு ஊடக சந்திப்பையும் மற்றும் அரச அதிகாரிகளையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஏனைய விவசாய துறை சார்ந்தவர்களையும் சந்தித்து ஒரு கூட்டத்தை நடத்தியிருந்தீர்கள் அது உங்களுக்கு ஒரு பிரதிபலிப்பை ஏற்படுத்தியதா அல்லது அதுவும் கிடப்பில் போடப்பட்டதா?**

பதில் : அதுவும் கிடப்பில் தான் இருக்கின்றது. காரணம் என்னவெனில் இந்த மண்ணில் இருந்து நாங்கள் பெரியளவிற்கு விவசாய உற்பத்தியை மேற்கொண்டு தற்பொழுதுள்ள ஒரு இடர்கால நிலைமையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு தான் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் எதற்கு பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டார்கள் என்றே தெரியாமல் இருந்த வேளையில் ஒவ்வொருவரையும் அழைத்து நாங்கள் எங்களது பிரச்சனையை தெளிவுபடுத்தினோம். அந்த பிரச்சனையை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதின் அவர்கள் ஒரு மூன்று தடவைக்கு மேல் பாராளுமன்றத்தில் எங்களது பிரச்சனையை தெளிவுபடுத்தியிருந்தார். ஏனையவர்களை பொறுத்த வரையில் நாங்கள் மஸ்தான் எம்.பி திலீபன் எம்.பி எல்லோருடனும் நேரடியாக பேசியும் அவர்கள் எந்தவிதமான அக்கறையும் கொள்ளவில்லை. காரணம் இங்கிருக்கும் 6 பாராளுமன்ற உறுப்பினர்களும் விவசாயம் சார்ந்த ஆட்கள் இல்லை என்பது தான் உண்மை.

**கேள்வி : இந்த காரணத்தினால் நீங்கள் அவர்களுடன் நடத்திய பேச்சுக்களும் தோல்வியில் முடிந்ததாக நீங்கள் கூறுகின்றீர்கள். அவ்வாறெனில் எவ்வாறானதொரு திட்டத்தை முன்னெடுத்தால் இந்த விவசாய துறையை வன்னி மாவட்டத்திலே முன்னேற்ற முடியும் என்பது உங்களது கருத்து?**

பதில் : என்னைப் பொறுத்தவரையில் 90 வீதமான விவசாயிகள் வாக்களித்துத்தான் இந்த பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி பிரதேசசபை உறுப்பினர்களாக இருந்தாலும் சரி மாகாணசபை உறுப்பினர்களாக இருந்தாலும் சரி விவசாயிகள் தான் தேர்ந்தெடுக்கின்றார்கள். விவசாயிகள் தேர்ந்தெடுக்கின்றார்கள் என்றல்ல அவர்களுக்கு வேறுவழியிருக்கவில்லை ஆனால் எனது நோக்கு எதிர்காலத்தில் விவசாயிகள் தங்களுடைய தலையெழுத்தை தாங்களே தீர்மானிக்கக்கூடிய விவசாயம் சார்ந்த அரசியல்வாதிகளாக மாற வேண்டும். அல்லது போனால் இந்த விவசாயம் மேலே வரமுடியாது. காரணம் என்னவென்றால் இன்று 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் பாராளுமன்றத்திலே இருக்கின்றார்கள் ஆனால் வவுனியா மாவட்டத்தில் கச்சேரியில் எத்தனை அரச உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றார்கள் என்று பாருங்கள். 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்னியில் இருந்தாலும் இந்த அரச உத்தியோகஸ்தர்கள் எந்தளவு தூரம் அக்கறையாக நடக்கின்றார்கள் என்பதுதான் கேள்வி. இவர்களுக்கு எள்ளளவும் விவசாயத்தின் மேல் அக்கறையில்லை விவசாயிகளை ஒரு போடுதடியாகத்தான் இவர்கள் மிதித்துக்கொண்டு போகின்றார்களே தவிர இவர்களுக்கு வருகின்ற சம்பளம் போதுமானது ஆனால் நான் ஜனாதிபதியையோ அமைச்சர்களையோ குறை சொல்ல விரும்பவில்லை ஏனெனில் நாங்கள் கேட்கின்ற எல்லாவற்றிற்கும் அவர்கள் சம்மதித்து இன்று பொரஸ்ட் பிடித்த காணிகளை அல்லது பொரஸ்ட் இருந்த இடத்தில் கூட போய் நீங்கள் உளுந்தை விதையுங்கள் நெல்லை விதையுங்கள் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அவர்கள் இன்று எங்களது கிராமத்திற்கு வந்து சொல்லியிருந்தார். ஆனால் அவர் கூறுவதைக் கூட இந்த வனவலாகாவை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இந்த அரச உத்தியோகஸ்தர்கள் அரச அதிபர் உட்பட ஏற்றுக்கொள்வதில்லை என்பது தான் நிஜம்.

**கேள்வி: தமது சொந்த தேவைக்காக காணிகளை பிடிக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டைத்தானே வனலாகா முன்வைத்திருக்கின்றார்கள். இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

பதில் : 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் உளுந்து உற்பத்தியிலே இந்த நாட்டுக்கு தேவையான 40 வீதமான உற்பத்தியை வவுனியா மாவட்டம் கொடுத்தது. அந்த வவுனியா மாவட்டத்தை 40 வீதமான உற்பத்தியை கொடுத்த பிரதேசங்களை மட்டும் தான் இந்த மக்கள் ஏற்படுத்தினார்கள். அந்த பிரதேசங்களுக்கு அரசாங்கம் அதற்குரிய தகுந்த உறுதிகளையோ போமிட்டுக்களையோ வழங்காமல் இழுத்தடித்துக்கொண்டிருக்கின்றது. அந்த நிலைமையில் அந்த காணிகளைத்தான் துப்பரவு செய்து இந்த விவசாயிகள் செய்யும் வேளையில் எங்களது கடந்த கால வவுனியா மாவட்ட பிரதேசசெயலாளர் அவர்கள் கிட்டத்தட்ட 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போமிட்டுக்களை வழங்கியிருந்தார். ஆனால் இப்பொழுது உள்ள பிரதேச செயலாளர் அவர்கள் மிக தாமதித்து தன்னுடைய கதிரையை காப்பதற்காக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்கின்றார். ஆனால் இன்று அந்த நிலைமையை மாற்றி இந்த நாட்டை மேலே கொண்டுவர வேண்டுமாக இருந்தால் நிச்சியமாக பழைய ஜனாதிபதி சொன்னது போன்று தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற வேண்டும். அது இன்று குப்பைக்காடுகளாக இருக்கின்ற இந்த தரிசு நிலங்களை துப்பரவாக்கி விவசாயம் செய்வது உங்களுக்கு பிடிக்கவில்லையா.

**கேள்வி : அரச உயர் அதிகாரிகள் இதனை தடுப்பதனால் அவர்களுக்கு இதில் என்ன இலாபம் இருக்கின்றது என கருதி அவர்கள் செயற்படுகின்றார்கள்?**

பதில் : அவர்களுக்கு தங்களுடைய கதிரைகளை காப்பாற்றுவதற்கு அதாவது அரசாங்க அதிபருக்கு வால்பிடித்து தங்களது கதிரைகளை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பது தான் அவர்களது திட்டம். நான் நேர்மையாக பேசுகின்றேன் சிங்கள தமிழ் முஸ்லிம் மூவின மக்களும் விவசாயிகள் ஏழைகளாகத்தான் இருக்கின்றார்கள்.

மூவின மக்களுக்கும் இவர்கள் இடைஞ்சல் கொடுக்கின்றார்களே தவிர இவர்கள் ஊக்கப்படுத்தினால் வவுனியாவிலே உற்பத்தி செய்யக்கூடிய மேட்டுநில பயிர்களை நாங்கள் இந்த நாட்டிற்கே கொடுக்கக்கூடிய வளமான இடம் வவுனியாவில் இருக்கின்றது. ஆனால் தற்பொழுதிருக்கும் அரச அதிகாரிக்கு தமிழ் தெரியாது அதே போன்று திறமையும் இல்லை. அதனால் திறமையுள்ள ஒரு தமிழ் தெரிந்த நாங்கள் சிங்கள தமிழ் முஸ்லிம் என்று குறைகூறவில்லை. தமிழ் தெரிந்த மக்களோடு பழகக்கூடிய ஒரு அரச அதிகாரியை தெரிவு செய்தால் சில மாற்றங்களை நாங்கள் பேசி தீர்மானித்துக்கொள்ள முடியும். அது தான் உண்மை நிலவரம்.

**கேள்வி : தற்பொழுது நீங்கள் உங்களது விவசாய அமைப்புக்களின் தலைவராகவுள்ள காரணத்தினால் விவசாய வட்டத்திலே நீங்கள் எதிர்வரும் காலங்களிலே இதற்கான தீர்வை எட்டுவதற்கு என்ன தீர்மானங்களை மேற்கொண்டிருக்கின்றீர்கள்?**


பதில் : நாங்கள் தற்பொழுது எங்களது மரக்கறி உற்பத்தியை பொறுத்த வரையில் கிராமங்களிலிருந்து 10.15 கிலோமீற்றர் போய் முடிய அந்த கொண்டு போகின்ற மரக்கறி உற்பத்திகளுக்கு 10 வீத வரி அடிக்கின்றார்கள். இது உலகத்திலே இல்லாத நடைமுறை இந்த 10 வீத வரியை அகற்ற வேண்டும் என நாங்கள் பல தடவைகள் சொல்லியும் அரசாங்க அதிபர் மாற்றுகின்றேன் என்று சொன்னார் ஆனால் அதுவும் எங்களது தேசிய பிரச்சனை போன்று தான் இழுபட்டுக்கொண்டு இருக்கின்றது. ஆனால் எங்களிடம் சில திட்டங்கள் இருக்கின்றது. இவர்கள் என்ன செய்தாலும் நாங்கள் ஜனவரி இறுதிக்குள் நிச்சயமாக எங்களது உற்பத்திப் பொருட்களை நாங்கள் உல்லாச பயணிகளின் ஹொட்டல்களுக்கு உல்லாச பயணிகள் விடுதிகளுக்கு அநுராதபுரத்தை பார்த்தால் 200 க்கும் மேற்பட்ட விடுதிகள் இருக்கின்றது அதைப்போன்று பூட்சிட்டி போன்ற கடைகளுக்கு நாங்கள் எங்களது உற்பத்திகளை நேரடியாக ஒன்லைன் செக்சனை உருவாக்கி கொடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ள இருக்கின்றோம். அப்படி கொடுக்கும் பொழுது உற்பத்தியாளனுக்கும் நுகர்வோருக்கும் இடையில் ஒரு இடைத்தரகர் தான் இருப்பார்.

அதனால் உற்பத்தியாளன் தன்னுடைய உற்பத்தியை மேற்கொள்ளவதற்குரிய ஊக்கத்தை நாங்கள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்பது எங்களது நோக்கம். இது சம்மந்தமாக என்னோடு கனடாவில் இருக்கின்ற நண்பர் ஒருவர் ஆரியன் என்பவர் ஒழுங்குபடுத்தியிருந்தார் இங்கு விளையக்கூடிய உளுத்துகளை அவர் அவரே வீடுகளில் வைக்கக்கூடிய மாதிரியான பை வகைகளை அதாவது கனடாவில் இருக்கின்ற அந்த பை வகைகளை இங்கு கொண்டு வந்து உளுந்துகளை கொள்முதல்செய்து தன்னுடைய உளுந்தை தானே வீடுகளில் வைத்தால் அது எந்தவித பூச்சிகளின் தாக்குதலும் இல்லாமல் பாதுகாக்கக்கூடியதாக இருக்கும்.

தொடரும்...

நேர்காணல் : இரணியன்

# 22வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம்




கலாநிதி ஜெகான் பெரேரா

அரசியலமைப்புக்கான 22ஆவது திருத்த நிறைவேற்றம் ஒரு அதிர்ச்சி போன்று வந்தது. முதலில் இந்தத் திருத்தம் மீதான நாடாளுமன்ற விவாதத்தை பின்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டபோது அண்மைய எதிர்காலத்தில் அது மீண்டும் விவாதத்துக்கு எடுக்கப்படாது அல்லது எடுக்கப்பட்டாலும் நிறைவேற்றப்படாது என்றே தோன்றியது.

அரசாங்க உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே இரு சர்ச்சைக்குரிய விடயங்களில் கருத்து வேறுபாடு இருந்தது. கட்சிகளுக்கு இடையில் மாத்திரமல்ல கட்சிகளுக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் நிலவின. முதலாவது சர்ச்சைக்குரிய விடயம் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தில் இரண்டரை வருடங்கள் கடந்த பின்னர் ஜனாதிபதி தனது தற்துணிபு அதிகாரத்தைப் பயன்படுத்தி அதைக் கலைப்பது பற்றியது. இரண்டரை வருட காலத்துக்குப் பிறகு நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை புதிய திருத்தத்திலும் நிலைபெறச் செய்தது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு தெளிவான அரசியல் வெற்றியாகும்.

20ஆவது திருத்தமும் தற்போதைய 22ஆவது திருத்தமும் இரண்டரை வருடங்களுக்குப் பிறகு ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தை கலைக்கமுடியும் என்று கூறுகின்றன. இவற்றுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தம் நான்கரை வருடங்களுக்கு பின்னர் மாத்திரமே நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியும் என்று ஜனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்தியது. ஆனால், 22ஆவது திருத்தம் இரண்டரை வருடங்களுக்குப் பிறகு நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை தொடர்ந்து பேணுகிறது. இதை நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஒரு சிதைவாகவே கருதமுடியும்.

நாடாளுமன்றத்துக்கு ஐந்து வருட ஆணையை மக்கள் வழங்கிய பிறகு விரைவாகவே ஜனாதிபதி அதைக் கலைப்பது ஒரு நல்ல ஜனநாயக நடைமுறையல்ல. 2004ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடாளுமன்றத்தைக் கலைத்தபோது இதே அடாத்தான் ஜனாதிபதியின் அதிகாரத்தின் பிரயோகத்தினால் ஜனாதிபதி விக்கிரமசிங்கவே அன்று பாதிக்கப்பட்டவர். இடைநடுவில் அவரது பிரதமர் பதவி துண்டிக்கப்பட்டது.

இரண்டாவது சர்ச்சைக்குரிய விடயம் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாவது பற்றியதும் மக்களால் தெரிவுசெய்யப்படும் அரசியல் பதவிகளை வகிப்பது பற்றியதுமாகும். இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு 20ஆவது திருத்தம் அனுமதி வழங்கியது. ஆனால் 19ஆவது திருத்தம் அந்த உரிமையை பிரத்தியேகமாக தடுத்தது. இப்போது 22ஆவது திருத்தமும் அவ்வாறே செய்திருக்கிறது.

தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் சுமார் பத்துப் பேர் இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் என்று கூறப்படுகிறது. அந்த வெளிநாடுகளின் குடியுரிமையைக் கைவிடுவதா அல்லது நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேறுவதா என்பதை தீர்மானிக்கவேண்டியவர்களாக அவர்கள் இப்போது இருக்கிறார்கள். இது ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு பாரிய ஒரு தாக்கமாகும். அதன் தேசிய அமைப்பாளரும் அதிகார மையமுமான பசில் ராஜபக்ஷ இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர். இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கை நாடாளுமன்றத்திற்குள் இருந்தே கிளம்புகிறது. அவர்கள் பதவி விலகாவிட்டால் தகராறை நீதிமன்றத்திலேயே தீர்க்கவேண்டிவரும்.

**எரியும் பிரச்சினைகள்**

அரசியலமைப்புக்கான 22ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் 174 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஒரேயொரு உறுப்பினரே அதற்கு எதிராக வாக்களித்தார். இதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகக் கருதமுடியும். அவரின் தலைமைத்துவத்தின் கீழ் அரசின் தடுப்புக்களும் சமப்படுத்தல்களும் முறைமையில் (state's system of checks and balances) குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பு உண்மையில் ஏகமனதாக இடம்பெற்றிருக்கின்றன. இது ஆளும் கட்சியின் பழைய தலைவர்கள் அணிக்கும் பலவான்களுக்கும் ஒரு தோல்வியாகும். ஆளும் கட்சி மூன்று அல்லது அதற்கும் கூடுதலான குழுக்களாக சிதைந்துபோய்க்கிடக்கிறது.

ஆளும் கட்சியின் மொத்தம் 134 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 30க்கும் அதிகமானவர்கள் மாத்திரமே 22ஆவது திருத்தத்தை எதிர்த்தார்கள். கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்றத்திற்கு வரமுடியாதவாறு செய்யப்பட்டிருக்கிறார். முன்னாள் நிதியமைச்சரும் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷ வெளிநாட்டு குடியுரிமையை துறக்காவிட்டால் நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருந்தே கட்சிக்கு வழிகாட்ட வேண்டியிருக்கும். சமுதாயத்தின் அடிமட்டத்தில் மக்களை அணிதிரட்டுவதிலேயே அவரின் ஆற்றலும் பலமும் இருப்பதால் அவருக்கு இது ஒரு பாரதூரமான பின்னடைவாக இல்லாமல் இருக்கலாம். நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருந்து மக்களை அணிதிரட்ட முடியும். 22ஆவது திருத்த நிறைவேற்றம் ஜனாதிபதியின் சில அதிகாரங்களை குறிப்பாக நியமனங்களைச் செய்வது தொடர்பான அதிகாரங்களை குறைக்கும். 20ஆவது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதி தான் விரும்பியவர்களை சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் அரசின் உயர்பதவிகளுக்கும் நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார். அந்த அதிகாரத்தை இப்போது ஜனாதிபதி இழக்கிறார் (இந்த நியமனங்களில் பிரதம நீதியரசர், உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கான நீதிபதிகள், தேர்தல்கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்கள், தலைவர்கள் நியமனம், பொலிஸ்மா அதிபர் நியமனம் ஆகியவை அடங்குகின்றன).

இந்த அதிகாரங்கள் இப்போது அரசியலமைப்பு பேரவைக்கு மாற்றப்படுகின்றன. அரசியலமைப்பு பேரவை மீது ஜனாதிபதி செல்வாக்கைக் கொண்டிருப்பார். ஆனால், எதேச்சையான அதிகாரமிருக்காது. ஏனென்றால், அந்தப் பேரவையின் உறுப்பினர்கள் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஜனாதிபதியினால் தெரிவுசெய்யப்படுவார்கள். பேரவைக்கான மூன்று சிவில் சமூக உறுப்பினர்கள் பிரதமரினாலும் எதிர்க்கட்சி தலைவரினாலும் கூட்டாக நியமிக்கப்படுவார்கள். ஆணைக்குழுக்களுக்கு பக்கச்சார்பற்ற உறுப்பினர்கள் நியமனமாவதை இந்த சிவில் சமூக உறுப்பினர்களினால் உறுதி செய்யக்கூடியதாக இருக்கும். இவ்வாறாக தனது அதிகாரங்களில் சிலவற்றை கைவிடுவதன் மூலமாக ஜனாதிபதி இதுகாலவரை கடுமையாக பிளவுபட்டிருந்த ஒரு நாடாளுமன்றத்தில் எதிர்பார்த்திராத வகையிலான கருத்தொருமிப்பை கொண்டு வந்த ஒரு தலைவர் என்ற நியாயப்பாட்டை பெறுகிறார்.

ஆளும் கட்சி மூன்று அல்லது அதற்கும் கூடுதலான குழுக்களாக சிதறுண்டு போனமை நாடு எதிர்நோக்குகின்ற பாரதூரமான பிரச்சினைகளைக் கையாளுவதற்கு கருத்தொருமிப்பின் அடிப்படையிலான அணுகுமுறையை வகுப்பதில் தொலைநோக்கும் துணிவாற்றலும் கொண்ட ஒரு தலைவராக மகத்தான பாத்திரத்தை ஜனாதிபதி வகிக்க வசதியாயமையும் எனலாம்.

இந்த பிரச்சினைகளில் கடந்த இரு வருடங்களில் பாரதூரமான பரிமாணங்களை எடுத்த பொருளாதார நெருக்கடி, நீண்டகால ஊழல் மற்றும் தவறான நிர்வாகம் ஆகியவை அடங்கும். பொருளாதார மறுசீரமைப்பு பல மட்டங்களில் மக்கள் மீது பாரிய சுமைகளை ஏற்றப்போகின்ற ஒன்றாக அமையும். அந்த மறுசீரமைப்பை ஒரு இருதரப்பு இணக்கப்பாட்டு அணுகுமுறையூடாக கையாளுவது சிறந்ததாக இருக்கும். நீண்டகால தேசிய இனப்பிரச்சினையையும் இதே அணுகுமுறையில் கையாளுவது நல்லது.

1956 தொடக்கம் அரசியல் தீர்வொன்றைக் காணமுடியாமல் இருக்கும் இனப்பிரச்சினை உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னர் அடங்கிப்போன ஒரு எரிமலை போன்று தோன்றுகிறது. ஆனால் யதார்த்தநிலை அதுவல்ல.

மானசீகமான அணுகுமுறை

கருத்தொருமிப்பு அரசாங்கத்தை நீடிப்பதற்கு சொல்லும் செயலும் ஒன்றாயமைவதுடன் மானசீகமான அக்கறையை வெளிக்காட்ட வேண்டியதும் அவசியமாகும். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச இதைச் சுட்டிக்காட்டினார். அரசியலமைப்பு திருத்தங்கள் நன்னோக்குடன் கொண்டுவரப்படவேண்டும் என்று அவர் சொன்னார். அரசியலமைப்பு பேரவைக்கான சிவில் சமூக உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின் மூலமாக தெரிவு செய்யும்போது அந்த மூவரையும் அரசாங்கமே நியமித்துவிடக்கூடிய சாத்தியம் இருக்கும் என்பதால் அந்த உறுப்பினர்களை பிரதமரும் எதிர்க்கட்சி தலைவரும் கூட்டாக நியமிக்கக்கூடியதாக ஏற்பாடு வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாச விடுத்த வேண்டுகோளை நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டார். அவரின் இந்தச் செயலில் பரஸ்பர விட்டுக்கொடுப்பு உணர்வு வெளிப்பட்டது. ஆனால் இரு விடயங்களில் அந்தக் கருத்தொருமிப்பு விரைவாக முறிவடையக்கூடும். அதில் மிகுந்த ஜாக்கிரதையுடன் செயற்படவேண்டியது அவசியம்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து போராட்ட இயக்கம் எழுச்சிபெற்றதை அடுத்து புதிய தேர்தல்களுக்கான தேவை குறித்து சமுதாயத்தின் சகல மட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டது. இவ்வருடம் மார்ச்சில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படவேண்டியவையாக இருந்தன. ஒத்திவைப்புஇன்றிஉள்ளூராட்சிதேர்தல்களை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூட்டாக இணங்கின. ஏனென்றால், உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஏற்கெனவே ஒரு வருடகாலத்துக்கு நீடிக்கப்பட்டு விட்டது.

முரண்பாடு தோன்றக்கூடிய இரண்டாவது விடயம் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்த ஆட்சிமுறையின் தவறான முகாமைத்துவம் மற்றும் ஊழலுக்கு எதிராக அமைதிவழியில் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்படுவதாகும். ஊழலும் தவறான முகாமைத்துவமும் இல்லாத சமுதாயம் ஒன்றை வேண்டிநிற்பவர்கள் கைது செய்யப்பட்டு கொடூரமாகத் தண்டிக்கப்படுகின்ற அதேவேளை, அவற்றுக்குப்பொறுப்பானவர்கள் நாடாளுமன்றத்திலும் அரசாங்கத்திலும் உயர்பதவிகளில் தொடருகிறார்கள்.

22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து சகல சுயாதீன ஆணைக்குழுக்களும் செயலிழக்கும் என்று நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அபிப்பிராயம் வெளியிட்டார். குறிப்பாக இரு ஆணைக்குழுக்கள் சிறப்பாக செயற்பட்டதாக கூறிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அந்த இரண்டும் தொடர்ந்தும் இயங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அந்த இரு ஆணைக்குழுக்களும் சிவில் சமூகத்தினால் உன்னிப்பாக நோக்கப்படும்.

ஒத்திவைப்பு இன்றி உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த முடியும் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கும் தேர்தல் ஆணைக்குழுவும் மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திர உரிமைக்காக உறுதியாக குரல் கொடுத்து வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுமே அந்த இரு ஆணைக்குழுக்களுமாகும். மனித உரிமைகள் ஆணைக்குழு ஒரு அரச நிறுவனமாக இருக்கின்றபோதிலும் இவ்வாறாக ஜனநாயக உரிமைகளுக்காக உறுதியாக குரல் கொடுப்பது பெருமிதப்படக்கூடியதாகும். ஆட்சியதிகாரத்துக்கு உண்மையை எடுத்துரைப்பவர்கள் அரசு என்ற கப்பலை பாதுகாப்பான துறைமுகம் நோக்கி கொண்டுசெல்பவர்கள் என்பதால் துரோகத்தனமான அரசியல் போக்குகளில் இருந்து அவர்கள் ஆட்சி நிபுணத்துவமும் அரசியல் விவேகமும் கொண்ட தலைமைத்துவத்தினால் காப்பாற்றப்படவேண்டும்.

# உள்ளூர் ஆட்சி தேர்தல் சிறப்பு பார்வை!




தேர்தல் சீர்த்திருத்திய வகையில் தேர்தல் தொகுதி முறை மற்றும் விகிதாசார முறை இணைந்து இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. பலமிக்க கட்சிகளின் செல்வாக்கால் முறையான ஜனநாயகப் போக்கு உடைத்தேறியப்பட்டு, தந்திரோபாய ஜனநாயக தரிசனத்தை தந்த விகிதாசார முறையில் நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்தது. உள்ளூராட்சித் தேர்தல் பழைய வட்டார முறையும், ஓரளவு விகிதாசார முறையும் கலந்து இடம்பெறும் என ஆட்சியாளர்கள் குரல் கொடுத்து வந்தனர். கடந்த மே மாதம் 234 உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்பட்டு எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் தேர்தல் இடம்பெறும் என்று உறுதி வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் காணப்படும் நான்கு அடுக்கு அரசாட்சி முறைகளான ஜனாதிபதி, நாடாளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி என்பனவற்றில் உள்ளூராட்சியே அடிமட்ட மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுடன் தொடர்புபட்டதாகையால் அதில் நல்லாளுகைகளை விரும்புவோர் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர். முக்கியமாக தமிழர் பிரதேசம் நீண்ட காலமாக உள்ளூராட்சி அமைப்புகள் இயங்காத நிலையில் இருந்ததால் இனியாவது அவற்றை நல்ல முறையில் இயக்கி நல்லாட்சியை மக்களுக்கு வழங்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். எனவே, உள்ளூராட்சி பற்றி முறையான தெளிவை பெறுவது அவசியமாகும். அதுவே எமக்கான நல்லாட்சியை எய்துவதற்கான வழிமுறையாகும். இலங்கையில் வரலாற்றுக்காலம் முதலாக உள்ளூராட்சி முறைமைகள் நிலவி வந்துள்ளன. எனினும், நாம் 1948இன் பின் இலங்கையில் உள்ளூராட்சி முறைகள் எவ்வகையில் அமைந்திருந்தன என்பதைப் பார்ப்போம். உண்மையில் இவை பிரித்தானியரால் அறிமுகம் செய்யப்பட்ட முறைமைகளின் திருந்திய வடிவமேயாகும்.

**1948இல் நடைமுறைகளில் இருந்த உள்ளூர் அதிகார அமைப்புகள்**

**மாநகர சபை**
**நகர சபை**
**கிராம சபை**

1981இல் நகரசபை, கிராமசபை என்பன ஒழிக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபை எனும் அமைப்பு இல 35, 1981 சரத்து மூலம் உருவாக்கப்பட்டது. மேற்படி மாவட்ட அபவிருத்திச்சபை எனும் அமைப்பு முறை எதிர்பார்த்தளவு திருப்திகரமாக அமையாததால், 1987இல் சரத்து 15, 1987இன் படி பிரதேச சபைகள் அறிமுகம் செய்யப்பட்டன. இலங்கையில் தற்போது நாம் 3 வகையான உள்ளூர் அதிகார சபைகளைக் கொண்டுள்ளோம்.
**அவையாவன:**

**மாநகர சபை – 23**
**நகர சபை – 41**
**பிரதேச சபை – 271**
**மொத்தம் 335 அலகுகள்.**

பாரிய நகரத்தை மாநகர சபைகளும் சிறிய நகரத்தை பட்டின சபைகளும் கிராமபுற பகுதிகளை பிரதேச சபைகளும் கொண்டுள்ளன. இவை மாநகரசபைச் சட்டம், நகரசபைச் சட்டம், பிரதேசசபைச் சட்டம் என்பவற்றால் அரசியல் சட்ட அந்தஸ்தை பெற்றுள்ளன. இந்தியாவைப்போல எமது உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல் சாசன அங்கீகாரத்தையும் சாசன பாதுகாப்பையும் கொண்டிருக்கவில்லை. இந்தியாவில் 1992இல் ஏற்படுத்தப்பட்ட 73ஆவது, 74ஆவது அரசியல் சாசனத்திருத்தங்கள் கணிசமான அதிகாரங்களை உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு வழங்கின. பஞ்சாயத்து ராஜ் என்பது கிராமிய மட்டத்திலும் மாநகர அமைப்புகள் நகர மட்டத்திலும் சமூகமயமாக்கல் அபிவிருத்தி, மக்கள் நலன் தொடர்பான பணிகளை ஆற்றுகின்றன. இந்தச் சட்ட திருத்தத்தினால் பஞ்சாயத்து ராஜ் வீதிகளை அமைத்தல், கல்வி, விவசாய அபிவிருத்தி போன்ற பல விடயங்களில் பணியாற்ற முடிந்தது. இலங்கையின் 13ஆவது திருத்தத்தின்படி உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உருவாக்கம், அமைப்பு, சட்ட வரையறைகள் என்பனவும் தேசிய கொள்கைகளும் மத்திய அரசிடமே தொடர்ந்தும் உள்ளன. எனினும், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் உள்ளூராட்சி அதிகார சபைக்கு உள்ள அதிகாரங்களை மாவட்ட சபை பெற்றுக் கொள்ள முடியாதெனவும் கூறுகின்றது. தேவைப்படுமிடத்து மாகாண சபை உள்ளூராட்சி சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க முடியும் எனவும் விதந்துரைக்கின்றது. தேசிய மட்டத்திலான உள்ளூராட்சி அமைச்சு பொதுக்கொள்கை வழிகாட்டல், தேசிய ஒருங்கிணைப்பு என்பவற்றினை உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு வழங்கும். தேசிய மட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சுக்கு கீழ் இரு முகாமை நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவையாவன:

**உள்ளூராட்சிக்கான இலங்கை நிறுவனம்**

உள்ளூராட்சிக்குரிய முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் ஆய்வு என்பனவற்றை ஒன்றிணைக்கும்.

**உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்**

உள்ளூர் நிறுவனங்களுக்கு சலுகை அடிப்படையில் கடன்களை வழங்குவதற்கான அதிகார அமைப்பாகும்.

**உள்ளூராட்சி அமைப்பின் அதிகாரங்களும் செயற்பாடுகளும்**

உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி அமைப்புகள் பொதுவான ஆட்சி நடைமுறைகள் வழியாக அமுல்படுத்தலாம்.

அவை வருமாறு:

**சொத்துகளை பாராதீனப்படுத்துவதற்கும் தன்னுரிமையாக்குவதற்கும் விற்பதற்கும் அதிகாரம் இவைகளுக்கு வழங்கப்படும்.**

**உள்ளூராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி ஒப்பந்தங்களை செய்து கொள்ளலாம்.**

**வரிகளை அறவிடும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

**செலவுகளைக் கணிப்பிடும் அதிகாரம்.**

**உரிமைப் பத்திரங்களை வழங்கும் அதிகாரம்**

**உப விதிகளை உருவாக்கும் அதிகாரம்**

மேற்படி அதிகாரங்களும் செயற்பாட்டு வழிமுறைகளும் உள்ளூராட்சி அதிகார சபை சட்டங்களிலும் உப சரத்துகளிலும் கூறப்பட்டுள்ளன. தற்போது இலங்கையில் நிலவும் உள்ளூராட்சி அதிகார அமைப்புக்களுக்கு மேற்கு நாடுகளில் காணப்படுவது போல் முழுமையான சுய ஆட்சி அதிகாரம் வழங்கப்படவில்லை. மேற்கு நாடுகளில்உள்ளூராட்சிஅமைப்புக்கள்அவ்வவ் பிரதேசத்துக்குரிய கல்வி, காவற்துறை, சமூக சேவைகள் என்பவற்றில் அதிகாரம் செலுத்த முடியும். ஆனால், இலங்கையில் உள்ளூராட்சி அமைப்புகள் பொது நலன்கள் சார்ந்த துறைகளில், குறிப்பாக பொதுச்சுகாதாரம், கழிவகற்றல் போன்றவற்றிலும் சில சமூக சேவைகளிலும் ஈடுபட முடியும். பிரதேச நகர சபைகளை விட மாநகர சபைகளுக்கு மேற்படி விடயங்களை கையாள்வதில் அதிக அதிகாரம் உண்டு. எனினும், பிரதேச, நகர சபைகள் மக்களின் பங்களிப்புடன் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் கணிசமான செல்வாக்கை செலுத்த முடியும். உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான மேலே கூறப்பட்ட சட்டங்கள், சரத்துக்களை விட இலங்கைக்கான பொதுவான சட்டங்களையும் உள்ளூராட்சி அமைப்புகள் பயன்படுத்த முடியும்.

அவையாவன:

அரசமைப்பு சட்டம், உள்ளூராட்சி தேர்தல் சட்டம், பொது நிர்வாகச் சட்டம், முகாமைத்துவ சட்டம், வரி செலுத்தும் வழி வகைகள் பற்றிய சட்டம், பொதுச்சுகாதாரம், பௌதிக திட்டமிடல், பொதுநலன் சேவைச்சட்டம் போன்றவற்றையும் இவை பயன்படுத்த முடியும்.

**உள்ளூராட்சித் தேர்தல் முறை**

1981 இற்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளுக்கு வட்டார அடிப்படையிலேயே அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு, பின்னர் அவர்கள் கூடி தமது உள்ளூராட்சி சபைகளுக்கான தலைவர், துணைத் தலைவர்களை தெரிவு செய்யும் முறை இருந்து வந்துள்ளது. இம்மாதிரியான தேர்தல் முறை 1989ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் அதிகார சபையின் சட்டத்தினால் மாற்றியமைக்கப்பட்டது. 1989ஆம் ஆண்டு உள்ளூராட்சி அதிகார சட்டத்தின் படி விகிதாசார பிரதிநிதித்துவ முறை உள்ளூராட்சி அமைப்புக்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி பிரதேச சபை, நகர சபை, மாநகர சபைக்குரிய குறித்தொதுக்கப்பட்ட மொத்த அங்கத்தவர்கள் மொத்தமாக ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிப்பதன் மூலம் தேர்வு செய்யப்படுவர். கட்சிக்கு அல்லது குழுவுக்குக் கிடைக்கும் மொத்த வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறையில் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களில் சபைக்குரிய தலைவர், துணைத் தலைவர் என்போர் அரசியல் கட்சி/குழுக்களின் செயலாளர்களினால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் 4 ஆண்டுகள் அப்பதவியை வகிக்க முடியும். உள்ளூராட்சி அமைச்சு விரும்பின் மேலும் ஒரு வருடத்திற்கு தேர்தலை ஒத்தி வைக்க முடியும். உள்ளூராட்சி சபைக்குரிய வாக்காளர் ஒருவர் கட்சிக்கு/குழுவுக்கு ஒதுக்கப்பட்ட சின்னத்திற்கு புள்ளடி இடுவதன் மூலம் வாக்களிக்க முடியும். அதன் பின் அவருக்குரிய 3 விருப்பு வாக்குகளை வேட்பாளருக்கு வழங்கப்பட்ட இலக்கங்களின் நேரே புள்ளடி இடுவதன் மூலம் வழங்க முடியும். வாக்காளர் ஒருவர் 3 விருப்பு வாக்குகளை ஒருவருக்கோ/இருவருக்கோ/மூவருக்கோ வழங்க முடியும். விருப்பு வாக்குகளை பயன்படுத்தாது விடவும் முடியும். கட்சிக்கு/குழுக்களுக்கான வாக்கு அளிக்கப்பட்ட பின்னரேயே விருப்பு வாக்கிற்கான உரிமை பெறப்படுகிறது. தேர்வு பெற்ற அங்கத்தவர்களைக் கொண்ட அவையானது உள்ளூராட்சி அமைப்பின் கொள்கைகளை உருவாக்கும் அமைப்பாகும். இது உள்ளூராட்சி அமைப்பின் செயற்பாட்டிற்கு இன்றியமையாதது. அவை சில உப குழுக்களை அமைத்து செயற்படும்.

**அவையாவன:**
**நிலையியல் குழு**
**தேவையை ஒட்டிய தற்காலிக குழு**

உள்ளூராட்சி அவையின் எந்தெந்த தீர்மானங்களும் நிலையியல் குழுவில் கலந்துரையாடப்பட்ட பின்னரே அவைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாநகர சபைக்கு இவ் வழிமுறை இன்றியமையாதது. நகர சபை, பிரதேச சபைகளுக்கு இவை அவசியம் இல்லை. எனினும், இவ் வழிமுறையை பின்பற்றுதல் வரவேற்பிற்குள்ளாகும் எனலாம். உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் மாகாண சபைகளின் உருவாக்கத்தினால் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அரசின் அமைச்சுக்களும், அரசு முகாமை நிறுவனங்களும் உள்ளூராட்சி சபையின் மேல் தமது அதிகாரத்தை செலுத்துகின்றன. வட்டார தேர்வுகளை ஒழித்தமை விகிதாசார பிரதிநிதித்துவ முறையை கொண்டு வந்தமை என்பன பிரதேச ரீதியாக மக்கள் சேவையாளர் உள்ளூராட்சி சபைக்கு தேர்ந்தெடுக்க தடையாக அமைந்துள்ளதென சுட்டிக்காட்டப்படுகிறது. இத்தேர்தலின் பின் தலைவர், துணைத் தலைவர் என்போரை அரசியல் கட்சி அல்லது குழுச் செயலாளர் தேர்ந்தெடுப்பது நல்ல ஜனநாயக முறையல்ல எனவும் விமர்சிக்கப்படுகிறது.


சமீபகாலமாக நாடாளுமன்ற தேர்தலிலும் விகிதாசார தேர்தல் முறையை விடுத்து தொகுதி வாரி தேர்தல் முறையையும், வட்டாரத்தேர்தல் முறையையும் அமுலாக்க வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலித்தன. எனினும், சென்ற நாடாளுமன்ற தேர்தலானது மக்கள் குரலை மதிக்காது மீண்டும் விகிதாசார முறைக்கே சென்றது. உள்ளூராட்சி தேர்தலானது வட்டார முறையில் இடம்பெறும் என்ற நம்பிக்கையும் அற்றுப்போகக்கூடிய போக்கு தென்படுகிறது. ஜனநாயக முறையை புறந்தள்ளி பாரிய கட்சிகளின் செயலாளர், தலைவர்களுக்கே உறுப்பினர்களைதேர்ந்தெடுக்கும்உரிமையை வழங்கும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் கட்சிகளின் சர்வாதிகாரமும் ஊழல், பணபலம், சண்டித்தனம், பந்தம் பிடித்தல் போன்றவற்றில் தேர்ந்தவர்களே உறுப்பினர் ஆகும் சந்தர்ப்பம் உள்ளமை நடைமுறையில் நாம் கண்ட யதார்த்தமாகும். எனவே, மக்கள் சக்தியை திரட்டி உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் வட்டார முறையில் இடம்பெற வேண்டும் என குரல் கொடுத்து ஜனநாயகத்தை காப்பற்ற முயல வேண்டும். நல்லாளுகை என்பது அப்போது தான் தோற்றம் பெற முடியும்.

**துரியோதரன்**

# 2023 பட்ஜெட் சொல்லும் செய்தி என்ன?



கலாநிதி ஜெகான் பெரேரா




**"ஜனாதிபதி விக்கிரமசிங்க தாமதமின்றி நாட்டின் இனநெருக்கடிக்குத் தீர்வைக்கண்டு தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டுவரும் தனது நோக்கத்தை அறிவித்திருக்கிறார். இதற்கு அவர் இலங்கை அதன் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடப்போகும் அடுத்த வருடம் பெப்ரவரி 4ஆம் திகதியை இலக்காக தெரிவுசெய்திருக்கிறார். இது சாத்தியமற்ற ஒரு கனவு என்று நிராகரிக்கப்படக்கூடும்."**

2023 பட்ஜெட் கணிசமான பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேறியமை பாதகமான சூழ்நிலைக்கு மத்தியிலும் அரசாங்கத்தின் நாடாளுமன்ற பெரும்பான்மை உறுதியாக இருக்கிறது என்பதை நிரூபிக்கிறது. ஆளும் கட்சி இருபதுக்கும் அதிகமான அதன் உறுப்பினர்களை இழந்து விட்டது. அவர்கள் இப்போது கட்சியின் நிலைப்பாடுகளை பின்பற்றுவதில்லை. ஏனைய உறுப்பினர்கள், தெளிவான தலைமைத்துவம் இல்லா விட்டாலும் கூட ஒன்றிணைந்து நிற்கிறார்கள் போன்று தெரிகிறது. பிரிந்து சென்ற குழுக்களில் ஒன்றுக்கு தலைமை தாங்கும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆளும் கட்சி உறுப்பினர்களை கடுமையாக கண்டனம் செய்தார். எந்த ஆணை மீது கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அந்த உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டார்களோ அந்த ஆணைக்கு அவர்கள் துரோகமிழைத்து விட்டதாக அவர் கூறினார். அரசுக்குச் சொந்தமான பொருளாதார நிறுவனங்கள் உட்பட அரச சொத்துக்களைப் பாதுகாப்பதாக முன்னைய தேர்தல்களின் போது ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

பொதுஜன பெரமுன கடந்த தேர்தல்களில் முன்வைத்த சொந்த விஞ்ஞாபனங்களை கைவிட்டு இப்போது விசுவாசத்தை ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு காட்டுவதாக பேராசிரியர் நாடாளுமன்றத்தில் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன் கூடிய உரையில் குற்றஞ்சாட்டினார்.

2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலிலும் 2020 நாடாளுன்ற தேர்தலிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை மேலும் அபிவிருத்தி செய்து நவீனமயப்படுத்துவதாக வாக்காளர்களுக்கு திரும்பத்திரும்ப உறுதியளித்த பொதுஜன பெரமுன, நிதியமைச்சர் என்ற வகையில், இலாபத்தில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களைக் கூட விற்றுவிடுவதற்கு திடசங்கல்பம் பூண்டிருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குகிறது என்று பேராசிரியர் சுட்டிக்காட்டினார். ஶ்ரீ லங்கா இன்சூரன்ஸ் மற்றும் ஶ்ரீ லங்கா ரெலிகோம் உட்பட பல அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவது குறித்து ஜனாதிபதி யோசனைகளை முன்வைத்திருக்கிறார். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்துவதற்கு பாதை திறந்து விடப்படுகின்றது என்பதை அரசாங்கத்தின் பட்ஜெட் யோசனைகள் தெளிவாகக்காட்டுகின்றன. அந்த நிறுவனங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று முன்னர் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களது நிலைப்பாட்டை மாற்ற வேண்டிய தேவை குறித்து இப்போது விளக்கமளித்துக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கை அதன் சொத்துக்களில் சிலவற்றை விற்பனை செய்வதன் மூலமாக வெளிநாட்டு செலாவணிக் கையிருப்பை அதிகரிக்காவிட்டால் சர்வதேச வாணிப முறைமையின் ஒரு அங்கமாக இருக்கமாட்டாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். வெளிநாட்டு நாணயக் கையிருப்பை 300 கோடி டொலர்களுக்கும் அதிகமாக அதிகரிக்காவிட்டால் இலங்கையின் வங்கிகளினால் வழங்கப்படும் கடன் பத்திரங்களை சர்வதேச கம்பனிகள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

### திடீர் மாற்றம்

ஆளும் கட்சி உறுப்பினர்களின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தின் பின்னால் உள்ள உண்மையான அரசியல் (Realpolitik) நடைமுறைச்சாத்தியமான இலக்குகளை அடிப்படையாக கொண்ட அரசியலாகும். இங்கு இலட்சியங்களை விடவும் தப்பிப்பிழைப்பதே நோக்கமாகும். ஒரு வருடத்துக்கு முன்னர் நாட்டை உலுக்கிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மூண்ட போராட்ட இயக்கம் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் செயலகங்களையும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களையும் முற்றுகையிட்டு அதன் உச்சக்கட்டத்தை அடைந்தது. அந்தப் போராட்ட இயக்கம் ஜனாதிபதியையும் பிரதமரையும் பதவிவிலக வைத்து மக்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய நம்பகமான எந்த தலைமைத்துவத்தையும் ஆளும் கட்சிக்கு இல்லாமலாக்கியது. இத்தகைய பின்புலத்தில்தான் தனது கட்சியின் தனியொரு உறுப்பினராக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த - ஐந்து தடவைகள் பிரதமாக இருந்த - விக்கிரமசிங்க சவாலை ஏற்று ஆளும் கட்சிக்கு தனது தலைமைத்துவத்தை வழங்க முன் வந்தார்.

போராட்ட இயக்கத்தை படைபலத்தை பயன்படுத்தி ஒடுக்கியமை, அரசாங்கத்தின் அண்மைய வரிக்கொள்கை மற்றும் ஊழல் தொடர்பில் உறுதியான கொள்கையின்மை என்று ஜனாதிபதி விக்கரமசிங்கவின் சில நடவடிக்கைகள் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. ஆனால், ஜனாதிபதி அரசாங்கத்தின் கடிவாளத்தை தனது கையில் எடுத்த பிறகு போராட்ட இயக்கத்துக்கான ஆதரவு வெகுவாக குறைந்து போனதுடன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வெளியில் வருபவர்களின் எண்ணிக்கையும் குறைந்தது.

கடுமையான பொருளாதார இடர்பாடுகள் தங்களது நுகர்வையும் சேமிப்புகளையும் பெருமளவில் குறைத்துக்கொள்ள மக்களை நிர்ப்பந்திக்கிறது. குறைந்தபட்சம் தற்போதைக்காவது மக்கள் இடர்பாடுகளை மௌனமாக பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள். கைத்தொழில் பகுதிகளில் ஆங்காங்கே சிறிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால், அவை பலமிக்க போராட்ட இயக்கமாக மாறுவதற்கான அறிகுறிகளை இன்னமும் காணவில்லை.

விரைவில் பொருளாதார மீட்சி பற்றிய நம்பிக்கையும் பாதுகாப்பு படைகள் பற்றிய பயமும் பெரும் எடுப்பிலான இன்னொரு சுற்று போராட்டத்துக்கு தயங்கும் மக்களின் விருப்புகளை தொடர்ந்து அடக்கிக்கொண்டிருக்கின்றன. இருந்த போதிலும், போராட்ட இயக்கம் உச்சக்கட்டத்தில் இருந்த போது மக்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் இருந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் இப்போது கூட மக்களுக்கு பயந்தவர்களாகவே இருக்கிறார்கள். தாங்கள் கடந்த காலத்தில் கடைப்பிடித்த அடிப்படை நிலைப்பாடுகளுக்கு எதிராக தற்போது செயற்பட வேண்டியிருந்தாலும் கூட ஒன்றிணைந்து நிற்பதற்கு அவர்கள் விரும்புகிறார்கள் போன்று தெரிகிறது.

தங்களது நிலைப்பாடுகளில் ஏற்பட்ட மாற்றத்தை நியாயப்படுத்திய அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன, "நாடுகளின் கடனை திருப்பிச்செலுத்தும் ஆற்றல் பற்றி மதிப்பிடும் சர்வதேச நிறுவனமான ஃபிற்ச் இலங்கையை மீண்டும் தரம் குறைத்திருக்கிறது. இலங்கையை யார் ஆட்சி செய்தாலும் அவர்கள் அதே பிரச்சினையை எதிர்கொள்வார்கள். நாம் எமது வெளிநாட்டு நாணய கையிருப்பை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்" என்று கூறினார்.

### முன்கூட்டியே தயாரான தீர்வு

இத்தகைய இடர்மிக்க சூழ்நிலையில், ஜனாதிபதி விக்கிரமசிங்க தாமதமின்றி நாட்டின் இனநெருக்கடிக்குத் தீர்வைக்கண்டு தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டு வரும் தனது நோக்கத்தை அறிவித்திருக்கிறார். இதற்கு அவர் இலங்கை அதன் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடப்போகும் அடுத்த வருடம் பெப்ரவரி 4ஆம் திகதியை இலக்காக தெரிவுசெய்திருக்கிறார். இது சாத்தியமற்ற ஒரு கனவு என்று நிராகரிக்கப்படக்கூடும்.

இனநெருக்கடி என்பது பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து நீடித்து வருகின்ற ஒன்றாகும். இந்த நெருக்கடி சுதந்திரத்துக்கு வெகு முன்னதாகவே காலணித்துவ ஆட்சியாளர்களினால் அடையாளம் காணப்பட்டதாகும். இலங்கையின் தலைவர்கள் சிலரால் முன்வைக்கப்பட்ட சுயாட்சிக்கான கோரிக்கைக்குப் பதிலளித்த காலணித்துவ ஆட்சியாளர்கள், "இலங்கையில் வாழ்பவர்கள் ஐக்கியம் மற்றும் ஒத்துழைப்பு உணர்வை பெருமளவுக்கு வெளிக்காட்டியிருந்தால் முழுமையான பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை அவர்களிடம் கையளிப்பதற்கு இருக்கக்கூடிய தடை நீங்கியிருக்கும்" என்று குறிப்பிட்டனர்.

பிரிட்டிஷ் காலணித்துவவாதிகளினால் அடையாளம் காணப்பட்ட இலங்கைச் சமூகத்தின் பிளவுபட்ட தன்மையை இன நெருக்கடிக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் காணக்கூடியதாக இருந்தது. 1957 பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த 1965 டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தையும் நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை ஓரளவுக்கு மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டது. 2000 சந்திரிகா குமாரதுங்கவின் அரசியலமைப்பு வரைவு நாடாளுமன்றத்தில் எரிக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் 2010 சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனைகளை அரசாங்கம் பரிசீலனைக்குக் கூட எடுக்கவில்லை. சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்க காலத்தில் 2015 அரசியலமைப்புச் சபை பல்வேறு யோசனைகளை முன்வைத்தது.

மறு வார்த்தைகளில் கூறுவதானால், இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு பல தடவைகள் தயாரிக்கப்பட்டன. அந்தத் தீர்வுகள் அந்தந்த காலகட்டங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்களினால் அல்லது அவற்றில் இருந்த சில பிரிவினரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலையும் இருந்தது. ஆனால், எதிரணியினால் நிராகரிக்கப்பட்டன. இத்தடவை இலங்கையின் வரலாற்றிலேயே மிகவும் தீவிரமான இராணுவவாத - இனத்துவ தேசியவாத கட்சி என்று அடையாளப்படுத்தக்கூடிய பொதுஜன பெரமுன அதன் குறுகியகால 'உயிர்வாழ்வுக்காக' இனவாதமற்ற ஒரு அரசியல் தலைவர் மீது தங்கியிருக்கிறது. இது மீண்டும் வரமுடியாத ஒரு வாய்ப்பாகும். இதைப் பயன்படுத்தவேண்டியது அவசியம்.

அடுத்த சுதந்திர தினம் அளவில் இனநெருக்கடிக்கு தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க செய்யும் அறிவிப்பு பட்ஜெட்டை நிறைவேற்றியதில் காட்டிய செயற்திறமையை இனநெருக்கடிக்கான அரசியல் தீர்விலும் காட்டமுடியும் என்ற அவரது நம்பிக்கையை பிரதிபலிப்பதாக இருக்கலாம். அந்தத் தீர்வுக்கான உருவரைபுகள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. நாடு ஒன்றுபட்டுச் செயற்படாவிட்டால் எதிர்காலம் என்று ஒன்று இருக்க முடியாது. தற்போதைய நெருக்கடியை நாடு கையாள ஒன்றுபடுவதற்கு அரசியல் தீர்வு அடிப்படை என்று தோன்றுகிறது.

# பிராந்திய செய்திகள்

## கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய வியாழக்கிழமை(30) இரவு இக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக மேற்பார்வையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிநடத்தலில் விடுமுறையில் இருந்த கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கல்முனை மஹ்மூத் பெண்கள் பாடசாலைக்கு அருகில் வைத்து கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளை சூட்சகமாக கொண்டு சென்ற 35 வயதான சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

மேலும் கைதான சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் 6 கிராம் 680 மில்லி கிராம் உட்பட கேரள கஞ்சா 1 கிராம் 900 மில்லி கிராம் 29700 ரூபா பணம் ஒரு கைத்தொலைபேசி உள்ளிட்டவைகள் கல்முனை தலைமையக பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சான்று பொருட்களுடன் கல்முனை தலைமையக பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஆஜர் செய்ய ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாய்ந்தமருதில் சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவச மூக்குக் கண்ணாடி விநியோகம்

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலத்திற்குட்பட்ட சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களிலுள்ள சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் கலந்து கொண்டதுடன் அதிதிகளாக வைத்தியர் எம்.வை.எம்.அலி ஜின்னா, உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், சமுர்த்தி மகா சங்க உதவி முகாமையாளர் கலாநிதி றியாத் ஏ மஜீத், சமுர்த்தி பிரிவு பிரதம கணக்காய்வாளர் இஸட்.ஏ.ரகுமான் ஓய்வு பெற்ற துறைமுக அதிகார சபை உத்தியோகத்தர் கே.எம்.அஸ்ரப் அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது 52 சிரேஷ்ட பிரஜைகளுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வுக்கு பூரண அனுசரணையை வைத்தியர் எம்.வை.எம்.அலி ஜின்னா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## போதைப்பொருள் பாவனையாளரின் திருமணத்திற்கான விண்ணப்பம் நிராகரிப்பு!

போதைப்பொருள் பாவனைக்கு உள்வாங்கப்பட்ட நபர் ஒருவரின் திருமணத்திற்கான சமய அங்கீகாரத்தை அக்கரைப்பற்று ஜீம்மா பெரிய பள்ளிவாசல் நிராகரித்துள்ளது. அக்கரைப்பற்று ஜீம்மா பெரிய பள்ளிவாசல் பிரதேசத்திற்குள் வசித்து வரும் நபர் ஒருவரின் திருமணத்தை நடாத்தி வைக்குமாறு ஜீம்மா பெரிய பள்ளிவாசலுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

குறித்த விண்ணப்பத்தை பரீசீலனைக்காக எடுத்துக் கொண்ட ஜீம்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை குறித்த நபர் போதை பொருள் பாவனைக்கு உள்வாங்கப்பட்டவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எனவே திருமண சடங்கை நிறைவேற்றி வைப்பதை தவிர்த்துள்ளதுடன் குறித்த விண்ணப்பத்தையும் நிராகரித்துள்ளது.

அத்துடன் குறித்த திருமணத்திற்கான மணமகனை போதைப் பொருள் புனர்வாழ்வு மையத்தில் அனுமதிப்பதுடன் அங்கிருந்து நற்சான்றிதழ் பத்திரம் பெற்று மீண்டும் பள்ளிவாசலில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறித்த இவ்விடயம் சமூக ஊடகங்களில் முக்கிய பேசு பொருளாக மாறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.


Board Of Trustees
AKKARAIPATTU JUMMAH GRAND MOSQUE
AKKARAIPATTU, SRI LANKA

Date: 28.12.2022

நிக்காஹ் விண்ணப்பம் நிராகரிப்பு.

இப்படிக்கு.

SM. Safees M.B.A
தலைவர் President
Jummah Grand Mosque
Akkaraipattu

பிரதிகள்

## 2 வயது பெண் குழந்தைக்கு பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த அண்ணன்!

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 2 வயது 8 மாத பெண் குழந்தையான சித்தியின் மகளுக்கு கையடக்க தொலைபேசியில் ஆபாச படங்களை காட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த 19 வயது இளைஞனை எதிர்வரும் ஜனவரி 9 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அன்று (28) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டார்.




குறித்த இளைஞன் சித்தியின் வீட்டில் தங்கி வாழ்ந்துவரும் நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் சித்தியின் 2 வயது 8 மாத பெண் குழந்தையை தனது மடியில் வைத்து கையடக்க தொலைபேசியில் ஆபாசபடங்களை காட்டி வந்துள்ளதுடன் அந்த குழந்தை மீது பாலியல் சேட்டை விட்டுவந்த நிலையில் அவர்களது உறவினரான பெண் ஒருவர் கண்டு குழந்தையின் தாயாரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குழந்தையும் தன் மீது மாமா இவ்வாறு நடந்து கொண்டதாக தாயாரிடம் தெரிவித்ததையடுத்து சகோதரியின் மகனுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்ததையடுத்து அவரை கைது செய்தனர்

இவ்வாறு பாதிக்கப்பட்ட குழந்தையை வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் கைது செய்யப்பட்டவரை அன்று (28) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் ஜனவரி 9 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## வடக்கு ரயில் மார்க்கத்தின் புனரமைப்பு பணிகள் அடுத்த வாரம் ஆரம்பம்!

அனுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான வடக்கு ரயில் மார்க்கத்தின் புனரமைப்பு பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றின் மூலம் ஜனவரி 5ஆம் திகதி முதல் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.



# சினி துளிகள்




## ரிலேஷன்ஷிப் குறித்து பேசிய அஞ்சலி

தெலுங்கு சினிமாவில் முதலில் நடிக்க துவங்கி பின் திறமையான நடிகை என்ற பெயரோடு தமிழில் அறிமுகமானவர் தான் நடிகை அஞ்சலி.

ராம் இயக்கிய கற்றது தமிழ் திரைப்படத்தின் மூலம் நல்ல அங்கீகாரம் பெற்ற அஞ்சலி, அங்காடி தெரு, தூங்கா நகரம், எங்கேயும் எப்போதும், வத்திக்குச்சி, இறைவி போன்ற படங்கள் நடித்து முக்கிய நாயகியாக வலம் வந்தார்.

இடையில் அஞ்சலிக்கும், நடிகர் ஒருவருக்கும் காதல் ஏற்பட இருவரும் விரைவில் திருமணம் செய்வார்கள் என எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால் சில காரணங்களால் அவர்கள் தற்போது பிரிந்து தங்களது சினிமா பயணத்தில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

அண்மையில் ஒரு பேட்டியில் நடிகை அஞ்சலி, டாக்சிக் ரிலேஷன் ஷிப் குறித்து பேசியுள்ளார்.
அதில் அவர், ஒரு நபருடன் ஏற்பட்ட ரிலேஷன்ஷிப்பால் தன்னுடைய கேரியரை கவனிக்க முடியாமல் போனதால், அந்த உறவு தவறான உறவு என வெளியே வந்துவிட்டதாக கூறியிருக்கிறார்.



## கதாபாத்திரங்களுக்காக நடிகர்கள் பசியோடு இருக்க வேண்டும்



தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகரான சிரஞ்சீவியின் இயக்குனர் பாபி என்கிற கே.எஸ்.ரவீந்திரா இயக்கத்தில் "வால்டேர் வீரய்யா" திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் இந்த படத்தில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன் நடிக்கிறார். சிரஞ்சீவி ஆர்தர்.ஏ.வில்சன் ஒளிப்பதிவு செய்யும் இந்த திரைப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார்.

"வால்டேர் வீரய்யா" திரைப்படம் வருகிற ஜனவரி 13-ம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இந்நிலையில் நடிகர் சிரஞ்சீவி சமீபத்தில் அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது, "கஷ்டப்பட்டுத்தான் நடிக்க வேண்டும். ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமான நடிகர் அந்த படத்துக்கு 100 சதவீதம் நியாயம் செய்ய வேண்டும். கஷ்டத்தை பார்த்து வருந்தக்கூடாது.

சிரஞ்சீவி கொடுத்த காட்சியில் நடித்தே ஆக வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே சினிமாவில் இருக்க அருகதை உண்டு. நடிப்பில் புகழ், பெயர் சும்மா வராது. கஷ்டப்பட வேண்டும். கதாபாத்திரங்களுக்காக நடிகர்கள் பசியோடு இருக்க வேண்டும்.

நடிப்பு பசி செத்து விட்டால் சினிமாவை விட்டே போய் விடவேண்டும். நான் கஷ்டமான காட்சிகளிலும் வெளியே காட்டிக்கொள்ளாமல் மாடுபோல் உழைப்பேன். திரையில் என்னை பார்க்கும் ரசிகர்கள் கைதட்டலில் கஷ்டப்பட்டது மறைந்துவிடும்" என்று கூறினார்.

## திரையரங்குகளை ஆக்கிரமித்த நாயகிகள்

சினிமாவில் நாயகர்களை ஹீரோவாகக் கொண்ட படங்கள்தான் அதிக அளவில் வெளியாகி கொண்டிருந்தன. சமீபகாலமாக நாயகிகளை மையமாகக் கொண்ட கதைகள் அதிகம் வெளிவர தொடங்கியுள்ளன. அதில் நயன்தாரா, திரிஷா, ஐஸ்வர்யா ராஜேஷ் உள்ளிட்டோர் தங்களுக்கு முக்கியத்துவம் தரும் திரைப்படங்களை தேர்வு செய்து நடிக்கின்றனர்.



நாயகர்களின் திரைப்படங்களை விரும்பி திரையிட்ட திரையரங்கு உரிமையாளர்கள், தற்போது நாயகிகளின் திரைப்படங்களையும் விரும்பி வெளியிடுகின்றனர். அந்த அளவிற்கு அவர்களுக்கு என்ற மார்க்கெட் உருவாகியுள்ளது. இந்த நிலையில் தான் நாயகிகளை மையப்படுத்தி எடுக்கப்பட்ட 4 திரைப்படங்கள் இந்த வாரம் வெளியாகின்றன.

அதில் திரிஷா நடிப்பில் உருவாகி இருக்கும் ராங்கி திரைப்படம் இந்த வாரம் வெளியாகிறது. அந்தப் படத்தை எங்கேயும் எப்போதும் படத்தை இயக்கிய சரவணன் இயக்கியுள்ளார். இதில் த்ரிஷா இணையதள செய்தியாளராக நடித்திருக்கிறார். அதிலும் ஆக்ஷன் பார்முலாவில் எடுத்துள்ளனர்.



ராங்கியுடன் ஐஸ்வர்யா ராஜேஷ் நடித்துள்ள "டிரைவர் ஜமுனா" வெளியாகிறது. இதில் வாடகை கார் ஓட்டும் பெண் ஓட்டுநராக ஐஸ்வர்யா நடித்துள்ளார். அவருடைய காரில் ஒரு கொலை கும்பல் ஏறுகின்றனர். அதற்கு பின் நடக்கும் சம்பவங்களை த்ரில்லர் பார்முலாவில் கூறியுள்ளனர்.

திரிஷா, ஐஸ்வர்யா படங்களுடன் கோவை சரளாவை முன்னிலை படுத்தி எடுக்கப்பட்டுள்ள "செம்பி" படத்தை வெளியிடுகின்றனர். அதை பிரபல இயக்குனர் பிரபு சாலமன் இயக்கியுள்ளார். தன்னுடைய வழக்கமான படங்களை போல மலை மலை சார்ந்த மனிதர்களின் வாழ்வியலையே இதிலும் படமாக்கியுள்ளார் என கூறப்படுகிறது.

தமிழ் நடிகைகளின் படங்கள் போலவே, பாலிவுட் நடிகை சன்னி லியோனி நடித்திள்ள Oh My Ghost என்ற தமிழ்படமும் வெளியாகிறது. ராணியாக வாழ்ந்த ஒரு பெண்ணின் பேயை மையப்படுத்தி எடுத்துள்ளனர். அதை நகைச்சுவையாக எடுக்க முயற்சித்துள்ளனர்.
இந்த நான்கு திரைப்படங்களும் இந்த வாரம் வெளியாகும் நிலையில், எந்த படம் வெற்றி அடையும் என்று எதிர்பார்ப்பும் உள்ளது. நாயகர்களை மையமாகக் கொண்ட திரையுரையில் நாயகிகளும் தற்போது வளர்ந்து வருவது நல்ல விஷயம் என விமர்சகர்கள் கூறுகின்றனர்.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும்

# நடந்தது என்ன?



**சுழியோடி**

**01**

2005 காலப்பகுதி அது மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்று போரை தொடாங்கவில்லை. ஆயினும் போருக்கான ஆயுத்தங்கள் படையினரால் மேற்கொள்ளப்பட்டு கொண்டு தான் இருந்தன என புலனாய்வு தகவல்கள் கிடைத்து இருந்தன. இராணுவத்துக்கான போர் பயிற்சிகளிலும் ஆயுத கொள்வனவுகளிலும் சிறிலங்கா தீவிரமாக இறங்கியிருப்பது தெளிவாக தெரிந்து இருந்தது. மஹிந்த அரசு பாரிய போர் ஒத்திகை ஒன்றை தொடங்கப்போகிறது என்பது உறுதியாக தெரிந்து இருந்தது. அதற்கான முன்னேற்பாடுகள் மட்டுமல்ல போர் நிறுத்தம் மீறும் வகையில் அங்கங்கே விடுதலைப்புலிகளுக்கு எதிரான சில தாக்குதல் நடவடிக்கைகளிலும் விடுதலைப்புலிகளுக்கு ஆத்திரத்தை ஊட்டக்கூடிய செயற்பாடுகளிலும் சிறிலங்கா படையினர் இறங்கியிருந்தனர்.

சிறிலங்காவின் இந்த போரை எதிர்கொள்ள தமிழீழ தேசியத்தலைவர் புதிய போர் வியூகங்களை வகுத்துக்கொண்டு இருந்தார். அதில் வான் புலிகளின் தாக்குதல் திட்டமும் இருந்தது என்பதை நாங்கள் பின்னாளில் தான் அறிந்து கொண்டோம். விடுதலை புலிகளிடம் விமானங்கள் இருப்பதாக செய்திகள் பரவலாக இருந்த போதும் அதற்கான தடையமோ ஆதாரமோ எவரிடமும் இருக்கவில்லை. 1998ஆம் ஆண்டு மாவீரர் தினத்தின் போது முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம் மீது தமிழீழ வான்படையினர் மலர்தூவி தமது முதல் பறப்பை மேற்கொண்டிருந்தனர். அதன்பின்னர் வான்புலிகளின் பறப்பை 2005 காலப்பகுதியிலேயே நிகழ்ந்ததை அறியமுடிந்தது. வன்னி வான்பரப்பில் அந்த அற்புதம் நிகழ்ந்தது தமிழீழ தேசிய தலைவரை சுமந்து கொண்டு தமிழீழ வான்படை வன்னி வான்பரப்பில் வட்ட மடித்தது.

இந்த பறப்பு செய்திகள் கூட விடுதலைப்புலிகளின் தளபதிகள் போராளிகள் மட்டத்தில் குறிப்பிட்ட சிலருக்கும் மட்டுமே தெரிந்தது மாவிலாற்றில் மஹிந்த அரசு போரை தொடங்கி கிழக்கை ஆக்கிரமிக்க தொடங்கிய போது வன்னியில் பெரும் தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை. ஆனால் வன்னிபகுதியில் ஆழ ஊடுருவும் படையினரின் தாக்குதல்கள் அதிகரித்து இருந்தன. இதில் போராளிகள் மட்டுமில்லை மக்களும் இழப்பை சந்தித்த வண்ணம் இருந்தனர். இந்த நிலையில் தான் 05/01/2008 சனிக்கிழமை மாலை மன்னார் பள்ளமடு பகுதியில் சிறிலங்கா ஆழ ஊடுருவும் படையினர் நடத்திய தாக்குதலில் கேணல் சாள்ஸ் வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

கேணல் சாள்ஸின் வீரச்சாவு விடுதலைப்புலிகள் மட்டத்தில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியிருந்தது. காரணம் சாள்ஸ் பொட்டு அம்மனுக்கு அடுத்த நிலையிலிருந்த ஒரு உயர்மட்ட புலனாய்வு தாக்குதல் தளபதி பொட்டு அம்மான் இல்லை என்றால் சாள்ஸ் என்ற நிலையில் தான் அன்றைய விடுதலைப்புலிகளின் கட்டமைப்பு இருந்தது. விடுதலை புலிகளின் பல கரும்புலித்தாக்குதல்கள் குறிப்பாக கட்டுநாயக்க கரும்புலி தாக்குதல் வரை எந்த தாக்குதல் நடவடிக்கை என்றாலும் சாள்ஸ் அவர்களின் பங்கு முதன்மையானதாக இருக்கும்.

தென்னிலங்கையில் வெற்றிகமான தாக்குதல்களை நடத்த முடியுமா? என்ற சந்தேகம் ஒரு காலத்தில் எழுந்த போது முடியும் என்று பல வெற்றிகரமான தாக்குதல்களை நிகழ்த்தி காட்டியவர் கேணல் சாள்ஸ். ஒரு தாக்குதல் திட்டத்தை தலைவருக்கே விளக்குகிற அளவுக்கு பொட்டு அம்மனுக்கு அடுத்து சாள்ஸ் அவர்களே இருந்தார்.

சிறிலங்காவின் தென்பகுதி நடவடிக்கை தொடக்கம் இலங்கை பிரதேசம் எங்கும் விடுதலைப்புலிகள் நடவடிக்கை என்றால் சாள்ஸ் அவர்கள் தான் முக்கியம் என்று சொல்லும் அளவிற்கு அவரது செயற்பாடுகள் இருந்தன. சாள்ஸ் அவர்களுக்கு அடுத்து கபிலம்மான் என்று தொடர்ச்சியாக பல்வேறு பொறுப்பாளர்கள் இவரது நடவடிக்கைகளுக்கு பக்கதுணையாக நின்று செயல்பட்டனர்.

சிறிலங்கா தென்பகுதி மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக மன்னாரில் தளம் அமைத்து சாள்ஸ் செயற்பட்டுக்கொண்டு இருந்தார். அந்த பிரதேசத்தை சாள்ஸ் தேர்ந்தெடுக்க காரணம் மன்னாரில் விடுதலை புலிகள் கட்டுப்பாட்டு பிரதேசம் எங்கிலும் செல்பேசிக்கான கவரேஜ் உள்ளது அத்துடன் டயலாக் ரன்கத்த மோட்டரோல என்பவற்றுடன் இந்தியாவில் இருக்கும் சில தொலைத்தொடர்பு நிறுவனங்களின் சிக்னல்கூட சில வேளைகளில் கிடைக்கும் எனும் அளவிற்கு பல தொலைத்தொடர்பு நிறுவனங்களின் சிக்னல் அங்கு தொடர்ச்சியாக இருந்தது. இது சாள்ஸின் நடவடிக்கைக்கு இலகுவாக இருந்தது.

அத்துடன் தென்னிலங்கை பகுதிகளுக்கு தாக்குதல் நடத்த மன்னார் கடல் பகுதியும் கரையை ஒட்டிய காட்டு பகுதியும் இலகுவாக இருந்தது கடல் வழியாக புத்தளம் சிலாபத்துக்கு வெடிபொருட்களை கொண்டு சென்று சேர்ப்பதும் அங்கிருந்து தென்னிலங்கை ஏனைய பகுதிகளுக்கு நகர்த்துவதும் இலகுவாக இருந்தது.

இதனால்மன்னாரேசாள்ஸின்பிரதானதளமாக மாறியிருந்தது ஒரு காலத்தில் அந்த பாதை படையினரின் முற்றுகைக்கு உள்ளானதால் மன்னாரின் கட்டையடம்பன் மடு போன்ற பகுதிகள் ஊடாக வில்பத்து சரணாலயம் சென்று அதனூடாக போராளிகளும் வெடிபொருட்களும் நகர்த்தபட்ட சம்பவங்களும் இடம்பெற்றன. இவ்வாறு விடுதலை புலிகளின் முக்கியத்துவம் மிக்க பொறுப்பாளர்களில் ஒருவரான கேணல் சாள்ஸ் தேசிய தலைவர் அவர்களுடன் அந்த வான் பரப்பில் ஈடுபட்டார் இந்த அனுபவம் பற்றி இவரது வீரச்சாவு நிகழ்வில் கலந்துகொண்ட பொட்டு அம்மான் போராளிகளுக்கு கூறியதை கேட்டதிலேயே விடுதலை போராட்டத்தில் இவரது காத்திரமான பங்கு என்ன என்பதை புரிந்துகொள்ள முடியும்.

சாள்ஸ் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையின் அடுத்த நிலை தளபதியாக செயல்பட்டவர் உண்மையில் விடுதலை புலிகளின் கட்டமைப்பு வன்னிக்குள் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் உலகநாடுகள் எங்கும் இயங்கிகொண்டு இருப்பது சிறந்த புலனாய்வு கட்டமைப்பினரால் தான் அதற்கு முக்கிய காரணங்களில் சாள்ஸ்ம் ஒருவர் சிலவேளைகளில் தாக்குதல் நடத்தப்போகும் கரும்புலிகளுக்கு கூட இவரின் அறிமுகம் தெரிந்திருக்காது கரும்புலிகளுக்கான திட்டத்தினை வேறு தளபதிகள் தான் வழிநடத்துவார்கள் இதனால் சாள்ஸ் பற்றி சாதாரண போராளிக்குகூட தெரிந்திருக்கவில்லை இவ்வாறான செயற்பாடுளினால் சாள்ஸ் கால்படாத இடமே இலங்கையில் இல்லை என்று தான் கூறவேண்டும். மட்டக்களப்பில் நின்றுகூட தனது தென்பகுதி நடவடிக்கைகளை மேற்கொண்டவர். விடுதலைப் புலிகளின் கொரில்லா பாணியிலான நடவடிக்கைகள் மரபு வழியிலான நடவடிக்கைகள் என்று எல்லாவித



தாக்குதல் நடவடிக்கையிலும் சாள்ஸ் அவர்களின் திட்டமிடல் இருக்கும் இதனால் தான் விடுதலைப் புலிகளுடன் புலனாய்வு துறையின் இரண்டாம் நிலை பொறுப்பாளராக உயர முடிந்தது. அன்று எமது விமானப்படை தளத்திற்கு தளபதிகள் அழைத்துவரப்பட்டு இருந்தனர்.

அப்போது அங்கு தலைவர் அவர்களும் நின்றிருந்தார் அதில் நானும் கலந்து கொண்டேன் எமது இயக்கத்தின் முதன்மை தளபதிகளுக்கு தலைவர் அவர்கள் விமானப்படையினை அறிமுகம் செய்துவைக்கிறார். இதில் விமானப்படைப்பிரிவின் போராளிகளும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். அதன் பின்பு நான்கு நான்கு பேராக விமானத்தில் பறப்பில் ஈடுபட்டார்கள். எமது பாதுகாப்பு படைப்பிரிவு விமான தளத்தின் பாதுகாப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

விமானத்தின் வடிவத்தினையும் விமான ஓட்டிகளின் திறமைகளையும் தலைவர் அவர்கள் தளபதிகளுக்கு எடுத்துரைத்தார். அதன் பின்பு தான் தளபதி அவர்களுடன் வந்தவர்கள் என்று நான்கு பேராக விமானத்தில் பறந்தார்கள். இரண்டு விமானங்கள் மாறி மாறி பரப்பில் ஈடுபட்டன. அப்போது தலைவர் அவர்களும் பறப்பதற்காக விமானம் ஒன்றில் ஏறினார்.

தலைவர் அவர்கள் ஏறும் போது அவரது பாதுகாப்புக்காக நானும் அதில் ஏறுவதற்கு முற்பட்டேன். அப்போது என்னை ஏறவிடாமல் தடுத்த தலைவர் அவர்கள் பொட்டு நான் தனியா போறேன் பிறகு நீ போ நான் போனால் நீ பார் என்று கூறிவிட்டு விமானத்தில் ஏறி வன்னி வான்பரப்பில் வட்டமிட்டுவிட்டு கீழே இறங்கினார். அங்கு நின்றவர்களுக்கு அப்போது தலைவர் சொன்னதன் அர்த்தம் என்ன என்பது புரிந்திருந்தது.

அதாவது விமானத்தில் நான் போகும்போது ஏதாவது நடந்தால் இயக்கத்தை நீ பார் என்பது தான் அர்த்தம். அதன் பின்பு தான் நான் பறப்பதற்கு சென்றேன் அப்போது தளபதி சாள்ஸ் நான் ஏறிய விமானத்தில் எனது பாதுகாப்புக்காக ஏறினார்.

அப்போது தலைவர் அவர்கள் சாள்ஸை என்னுடன் ஏறவிடாமல் தடுத்தார். இவங்கட விமானங்களை நம்பி எல்லோரும் ஒன்றாய் பறக்க வேண்டாம் முதலில் பொட்டு அம்மான் போகட்டும் பிறகு நீ போ என்று சொன்னார். ஏன் என்றால் பொட்டு இல்லாவிட்டால் நீதான் புலனாய்வு துறையை கொண்டு நடத்த வேண்டும் என்று சொன்னார். அந்த அளவுக்கு சாள்ஸ் திறைமையான தளபதியாக இருந்தார். அதன் பின்பு எல்லா தளபதிகளும் பரப்பில் ஈடுபட்டனர் என்றார். இவ்வாறு தளபதிகளுக்கு வான் படையினர் தொடர்பான அறிமுகம் நிகழ்ந்திருந்தது.

ஆனால் அதன் பின்னர் 26/03/2007 தமிழீழ வான்படை கட்டுநாயக்க மீது முதல் தாக்குதலை நடத்தி உலகத்திற்கு அறிமுகப்படுத்தி கொண்டது தமிழின வரலாற்றில் முதல் வான்படை அமைத்த தலைவன் என்னும் பெருமை தமிழீழ தேசிய தலைவருக்கு கிடைத்தது. இத் தாக்குதல் மூலம் வான் பாதுகாப்பு படையணி என்ற அமைப்புடன் இருந்த விடுதலைப்புலிகள் வான் தாக்குதல் படையணி என்ற புதிய பலத்தை பெற்றிருந்தனர். ஆனால் இத்தனை பலம் கொண்டிருந்த விடுதலைப்புலிகள் இரண்டு வருடங்களில் எவ்வாறு பலமிழந்து செயலிழந்து போனார்கள்.

**தொடரும்...**

# பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்களை பலியெடுக்க உருவாக்கப்பட்டதா?

இலங்கையில் புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பயங்கரவாத தடைச் சட்டம் வேண்டாம் என வலியுறுத்தியும் பல இடங்களில் எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதை காண கூடியதாக இருக்கின்றது. பயங்கரவாத தடைச்சட்டம் 1979 ஆம் ஆண்டு இலங்கையில் தற்காலிகமாக கொண்டுவரப்பட்டது. பின்னர் 1982 ஆம் ஆண்டு நிரந்தர சட்டமாக்கப்பட்டு இன்று வரை அமுலில் இருக்கின்றது. பொதுமக்கள் உட்பட சர்வதேசமும் இந்த சட்டத்தை எதிர்க்கின்ற போதும் பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை.

பயங்கரவாதச் செயல்களுக்கெதிராகவும் பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளுக்கெதிராகவும் இலங்கையையும் இலங்கை மக்களையும் பாதுகாப்பதற்காகவும், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்படுகின்ற பயங்கரவாதத்தையும் பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளையும் தடுப்பதற்காகவும், இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்கான ஆயத்தஞ் செய்வதற்காக இலங்கையின் ஆள்புலத்தையும் அதன் மக்களையும் பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும் பயங்கரவாதச் செயல்களையும் பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளையும் கண்டுபிடிப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் பயங்கரவாதச் செயலொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு ஏதேனும் தவறைப் புரிந்துள்ள எவரேனுமாளை அடையாளங்காணுதல், விசாரணைக்காகப் பற்றுதல், கைதுசெய்தல், அவரின் கட்டுக்காப்பு, அவரைத் தடுத்து வைத்தல், புலனாய்வுசெய்தல், அவருக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுத்தல் மற்றும் அவருக்குத் தண்டனையளித்தல் என்பவற்றுக்காகவும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு ( தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குவதற்காகவும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக புதிய பாதுகாப்பு சார் சட்டத்தை இயற்றும் வரை பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தப்போவதில்லை என சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் மீறியுள்ளது. இவ்வாறான நிலையில் எதிர்கால செயற்பாடுகளுக்கு எவ்வாறு சர்வதேசத்தின் நம்பிக்கையை வெற்றி கொள்ள முடியும் என முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சபையில் தெரிவித்துள்ளார். இந்த சட்டத்தின் கீழ் ஒருவர் கைதுசெய்யப்பட்டு மூன்று மாத காலத்துக்கு தடுத்து வைக்கப்படுவதோடு சம்மந்தப்பட்ட அமைச்சு சிபார்சு செய்யும் வரை 18 மாதம் வரை இந்த தடுப்பு நீடிக்கும். அதே வேளை இந்தச் சட்டம் நீதிமன்றத்தையே சவாலுக்கு உட்படுத்தும். எனவே இன்று இந்த சட்டத்தினூடாக மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

மனித உரிமையை மீறுகின்றவர்களைக் கூட இந்தச் சட்டம் காப்பாற்றும். எனவே சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக இந்த சட்டத்தை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தும் இந்தச் சந்தர்ப்பத்தில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்காக இலங்கை அரசாங்கம் முயன்றுள்ளதை மக்கள் விரும்பவில்லை. பேரினவாதச் சிங்களத்தின் ஒரே இலக்கு தமிழர்கள் இந்த நாட்டில் எந்தவித மனநின்மதியுடனும் வாழக்கூடாது என்ற ஒரே எண்ணம் தான். தமிழ் மக்களை அடக்கி வைத்திருக்க வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கத்திற்காக சிங்கள பேரினவாதம் இன்றல்ல, 1979 ஆம் ஆண்டுமுதல் இறுதியாக போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் வரையில் போட்டு வைத்திருந்த சட்டமே இந்த பயங்கரவாதச் தடைச்சட்டம். இந்த நாட்டில் உள்ள தமிழர்களில் முழுமையான சுதந்திரங்களையும் பறித்து அவர்களை




இந்த நாட்டின் எல்லைக்குள்ளேயே தனிமைப்படுத்தும் குரூர எண்ணம் கொண்ட சிங்களத்தின் சட்டமுறையே இதுவாகும். இச்சட்டத்தின் பின்விளைவுகள், பாதிப்புக்கள் எதனையும் யோசிக்காது மகா புத்திசாலியான மகிந்த ராஜபக்ஸ புதிய விதிகளுடன் போட்டிருக்கும் சட்டமே பயங்கரவாத தடைச்சட்டம். இந்தச்சட்டத்திலும், சட்ட ரீதியான பல ஓட்டைகளும், சிக்கல் நிலைகளும் தோன்றியுள்ளன என சட்ட ஆய்வாளர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளனர். எனினும் பேரினவாதத்திற்கு ஒத்து சாங்கு ஊதும் சிறி லங்கா நீதிமன்றங்கள் இருக்கும் வரை சிறந்த வரையறை எதுவும் இல்லாமல் தமிழர்களை அழிப்பதற்கு எந்த சட்டத்தையும் இயற்றக்கூடியவகையிலேயே நடைமுறையும் உள்ளது. ஆனால் இன்று இச்சட்டமானது சிங்கள பேரினவாதிகள் பக்கமே திரும்பி இருக்கின்றது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாக காணப்படுகின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களுக்கும், முஸ்லிம் இளைஞர்களுக்கும் நியாயம் வழங்கும்வகையில் பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும். இயற்றப்படும் சட்டங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக நல்லாட்சி அரசாங்கத்தில் சஹறான் குண்டுதாக்கல் தொடர்புடையோர் என 940 பேர் கைது செய்யப்பட்டு அதிலும் குறிப்பாக 440பேர் பயங்கரவாத தடைசட்டத்தில் இன்னமும் தடுத்து வைக்கப்படுள்ளனர். இதில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சென்று கையெழுத்து வைத்து விட்டு செல்லும் நடவடிக்கை இன்னமும் தொடர்கின்றது. இலங்கை ஒற்றையாட்சி அரசாங்கத்தின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து. பயங்கரவாதத்தை இல்லாதொழித்து விட்டதாக பெருமிதம் வெளியிட்ட போதும் தொடர்ந்தும் இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பதற்கான காரணம் என்ன என பலரும் கேள்வி எழுப்புகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன் பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் மீதான மக்கள் வெறுப்பும் அதன் மூலம் உருவான காலிமுகத்திடல் மக்கள் போராட்டத்தின் போது கூட இச்சட்டம் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானவுடன் இச்சட்டம் பயன்படுத்தப்பட்டு அதன் மூலம் சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினரை கைது செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இச்சட்டத்தை தடை செய்யக்கோரி நாடெங்கினும் கையெழுத்து வேட்டைகள் இவ்வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டாலும் இடையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள், மக்கள் போராட்டம் மற்றும் ஜனாதிபதி , பிரதமரின் பதவி விலகல் சம்பவங்களால் அது மறக்கப்பட்டு விட்டது. இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யலாம் என்ற விடயமே கைது செய்யப்பட்டவர்களுக்கு மிகவும் அச்சுறுத்தலான அதேவேளை அவர்களின் பாதுகாப்பு குறித்த கேள்விகளை எழுப்பும் ஒன்றாக இருக்கின்றது. சாட்சிகள் இன்றி கைது செய்யவும் காலவரையறை இன்றி அவர்களை தடுத்து வைக்கவும் வழி செய்யும் இச்சட்டம் குறித்து எவருமே சட்டரீதியாக கேள்விகள் எழுப்ப முடியாத சூழ்நிலைகள் கடந்த 43வருடங்களாக இருந்து வருகின்றன. இந்நிலையில் அவ்வாறு தடுத்து வைக்கப்படும் இடங்களையும் எவருக்கும் அறிவிக்க வேண்டிய அவசியமில்லை என்ற விவகாரம் இச்சட்டத்தின் பாரதூரமான தன்மையை காட்டி நிற்கின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு வலுவூட்டும் முகமாக அவசரகால சட்டமும் இணைந்து செயற்படுவது மற்றுமோர் அபாயகரமான விடயமாகும். நீண்டகாலமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த எட்டு விடுதலை புலிகள் இயக்க கைதிகள் அரசாங்கத்தினால் விடுதலை செய்யப்பட்டிருப்பது எதிர்பாராத ஒன்று. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அண்மைக்கால போராட்ட இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்களில் சுமார் 4000 பேரை கைது செய்து தடுத்து வைத்தது என்றாலும் அவர்களில் பலர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஆனால், நூற்றுக்கணக்கானவர்கள் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் பல மாதங்களாக வாடுகிறார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டும் அல்லது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று உள்நாட்டு மற்றும் சர்வதேசிய மனித உரிமைகள் அமைப்புகளினால் விடுக்கப்படும் வேண்டுகோள்களுக்கு இது வரையில் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை.

அரசாங்கம் பல்கலைக்கழக மாணவர்களின் அமைதியான போராட்டத்தை தடுத்து, பயங்கரவாத தடைச்சட்டத்தை முறைகேடாக பயன்படுத்தி, அப்பாவிகளை கைது செய்வதை நிறுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

குறிப்பாக, மாணவர் தலைவர் வசந்த முதலிகே மற்றும் மாணவர் இயக்கத் தலைமைத்துவத்தில் துடிப்பாக இயங்கும் இளம் புத்த பிக்குவான வண.கல்வேவா ஸ்ரீதம்மதேரோவினது கைதும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான அவர்களது தடுப்புக்காவலும் அண்மையில் நாட்டின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடுமையான கண்டனத்துக்குள்ளாகின. ஒரு அரச அமைப்பான மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் சுயாதீனத்தை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தி செயற்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது. விடுதலை புலிகள் இயக்கத்தின் எட்டு உறுப்பினர்களையும் அரசாங்கம் விடுதலை செய்திருப்பது வரவேற்கத்தக்கது. அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது தமிழ்ச்சமூகத்தினதும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினதும் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வந்தது. அவர்களின் விடுதலை தேசிய நல்லிணக்கத்துக்கான ஒரு சூழலையும் உருவாக்கும்.அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று அவர்களின் குடும்பங்கள் ஆர்ப்பாட்ட இயக்கங்களை தொடர்ச்சியாக நடத்தி வேண்டுகோள் விடுத்து வந்த போதிலும், தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் வலியுறுத்திய போதிலும் குறைந்தது முன்னைய நான்கு அரசாங்கங்கள் அதைச் செய்வதற்கு மறுத்தன.

விடுதலை செய்யப்பட்டிருப்பவர்களில் மூவர் முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கவை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றவாளிகளாக காணப்பட்டவர்கள்.அந்த குண்டுத் தாக்குதலில் அவர் தனது ஒரு கண் பார்வையை இழந்தார். ஜனாதிபதி விக்கிரமசிங்க கைச்சாத்திட்ட மன்னிப்பின் மூலமாக அவர்களை விடுதலை செய்வதற்கு முன்னர் அரசாங்கம் திருமதி குமாரதுங்கவின் கருத்தையும் கேட்டு அவரது சம்மதத்தையும் பெற்றுக்கொண்டது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னை கொலை செய்ய முயற்சித்த விடுதலை புலிகள் இயக்க உறுப்பினரை மன்னித்து விடுதலை செய்ததைப் போன்று திருமதி குமாரதுங்கவும் தனது பெருந்தன்மையை வெளிக்காட்டினார். இனப்பிரச்சினையின் விளைவான உள்நாட்டுப் போரினால் சின்னாபின்னாமாக்கப்பட்ட நாட்டின் காயங்களைக் குணப்படுத்த அத்தகைய பெருந்தன்மை அவசியமாகிறது.

பயங்கரவாத தடைச்சட்டமானது சிறுபான்மையினத்தை அடக்குவதற்காக போடப்பட்டாலும் இன்று பெருபான்மையினத்துக்கே திரும்பி இருக்கின்றது என்பதே கண்கூடு.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரயோகத்தை இடைநிறுத்துவதற்கான நியாயமான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென வலியுறுத்தியிருக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், அதற்குப் பதிலாக உருவாக்கப்படும் எந்தவொரு புதிய சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு உட்பட்டவையாக அமையவேண்டியது அவசியமாகும் என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இவ் பயங்கரவாத தடைச்சட்டமானது மக்களுக்கு அபாயகரமான ஒரு சட்டமாகவே பார்க்கப்படுகின்றது. இதனால் பலர் கைது செய்யப்பட்டு வருட கணக்கில் சிறையில் வாடுகின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. இச்சட்டத்தினூடாக கைது செய்யப்படவர்களின் நிலை என்ன அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்ற ஒரு விளக்கம் கூட இல்லாத ஓர் நிலையே காணப்படுகின்றது.

இச்சட்டம் தொடர்பாக அமைச்சர்களும், தமது கருத்துக்களைதெரிவித்திருந்தார்கள். அத்துடன் பொதுமக்கள் போராட்டங்கள் வழியாக தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்திக்கொண்டு இருக்கின்றார்கள். எனினும் இவ் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்குவது தொடர்பான எந்த முன்னெடுப்புக்களும் அரசாங்கம் செயற்படுத்துவதாக தெரியவில்லை என்றே கூறலாம்.

-மாதூரி-

# மகளிர் பக்கம்

## புருவ முடி அடர்த்தியாக வளர சூப்பர் டிப்ஸ்

சிலருக்கு கண் புருவம் மிகவும் மெலிதாக இருக்கும்! அது அடர்த்தியாகவும், கருமையாகவும் இருக்க வேண்டும் எனவும் விரும்புவார்கள்.

சில இயற்கை பொருட்களை வைத்தே புருவ முடியை அடர்த்தியாக வளர வைக்க முடியும்.

விளக்கெண்ணெய்

விளக்கெண்ணெயை பஞ்சில் தொட்டு புருவங்களில் தேய்த்து 30 நிமிடங்கள் கழித்துக் கழுவவும். இதை ஆறு வாரங்களுக்குத் தொடர்ந்து செய்துவரவும். விளக்கெண்ணெய் புருவ வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

கற்றாழை

கற்றாழை ஜெல்லைத் தேய்த்து, 30 நிமிடங்கள் கழித்துக் கழுவவும். இது விரைவில் முடி வளர உதவும்.

வெங்காயச் சாறு

வெங்காயச் சாற்றினை ஒரு பஞ்சில் நனைத்து தினமும் படுப்பதற்கு முன்பு தடவி வந்தால், புருவத்தில் முடி வளர்வதை விரைவில் நம்மால் காணமுடியும்.

பால்

பாலைப் பஞ்சால் தொட்டுத் தேய்த்து, 15 நிமிடங்கள் கழித்துக் கழுவவும். ஆறு மாதங்களுக்கு இதைத் தொடர்ந்து செய்துவர புருவ முடி சீராக வளரும்.

வெந்தயம்

வெந்தயம் 1/2 தேக்கரண்டி எடுத்து இரவு முழுவதும் ஊற வைத்து கொள்ளவும். மறுநாள் காலையில் ஊறவைத்த வெந்தயத்தை பேஸ்ட் போல அரைத்து புருவ முடியில் தடவி கொள்ளவும். 1/2 மணி நேரம் கழித்து கழுவி விட வேண்டும். வெந்தயத்தில் உள்ள நிக்கோட்டினிக் ஆசிட், புரோட்டீன் இருப்பதால் புருவ முடியை அடர்த்தியாக வளர வைக்க உதவுகிறது.



## வறட்டு இருமலை சரி செய்வதற்கு எளிய பாட்டி வைத்தியம்

ஒரு டேபிள் டீ ஸ்பூன் தேனை எடுத்து வெதுவெதுப்பான நீரில் கலந்து காலை மாலை என இரு வேளைகளிலும் குடித்தால் வறட்டு இருமல் பிரச்சனை சரியாகும்.

1 டீஸ்பூன் மஞ்சள் தூள் மற்றும் 1 டீஸ்பூன் ஓமத்தை கொதிக்கும் நீரில் போட்டு நன்கு கொதிக்க விட்டு, தேன் கலந்து தினமும் மூன்று முறை குடித்து வந்தால், வறட்டு இருமலில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.

இஞ்சியை தட்டி

சிறிதளவு இஞ்சியை எடுத்து தட்டி, அதனை வெதுவெதுபான நீரில் கலக்கி குடித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தொண்டைப் பகுதியில் ஏதேனும் கிருமி தொற்று இருந்தால் கூட வறட்டு இருமல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. வீட்டில் இருக்கும் உப்பை எடுத்து தண்ணீரில் கலந்து வாய் கொப்பளித்து வர வறட்டு இருமல் சரியாகும். கிருமி தொற்று இருந்தால் கூட குணமாகும்.

கற்பூரவள்ளி

கற்பூரவள்ளி இலையை ஒரு கப் நீரில் போட்டு கொதிக்க வைத்து இறக்கி, நீரை வடிகட்டி குடித்து வந்தால், வறட்டு இருமல் வருவதைத் தடுக்க முடியும்.



## உலர் திராட்சை சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்

உலர் திராட்சையானது சுவையானது மட்டுமல்ல! பல்வேறு மருத்துவ குணங்களையும் கொண்டுள்ளது. பொதுவாக உலர் திராட்சை கருப்பு, பச்சை மற்றும் கோல்டன் மூன்று நிறங்களில் கிடைக்கிறது.

இரவு முழுவதும் ஊற வைத்து உலர் திராட்சையை ஊறவைத்து அந்த தண்ணீரை குடித்து வந்தால் பல்வேறு நன்மைகள் உடலுக்கு கிடைக்கும்.

2 கப் தண்ணீரில் 150 கிராம் அளவுள்ள உலர் திராட்சையை போட்டு, நன்றாக கொதிக்க வைக்கவும். அந்த தண்ணீரை இரவு முழுவதும் நன்றாக ஊறவைக்க வேண்டும். பின்னர் காலையில் அந்த தண்ணீரை வடிகட்டி, மீண்டும் குறைந்த தீயில் சூடாக்கவும். இப்போது இந்த தண்ணீரை காலையில் வெறும் வயிற்றில் குடிக்கவும்.

நன்மைகள்

இந்த பானம் கல்லீரலில் உள்ள நச்சுக்களை நீக்கி, இரத்தத்தை சுத்தப்படுத்த உதவுகிறது.

சிறுநீரக பாதையில் ஏதேனும் நோய்த்தொற்று ஏற்பட்டிருந்தால், அதை குணமாக்க ஆயுர்வேதம் பரிந்துரைப்பது இந்த வழியைத் தான்.

இதய ஆரோக்கியம்


இது உங்களுடைய இதய ஆரோக்கியத்தை பராமரிக்கவும், உடலில் தேங்கியுள்ள கெட்ட கொழுப்புகளை நீக்கவும் உதவுகிறது.

திராட்சையில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் புற்றுநோயை உண்டாக்கும் ஃப்ரீ ரேடிக்கல்களிலிருந்து உங்கள் உடலைப் பாதுகாக்கவும் உதவுகின்றன.

எலும்புகள்

பெண்கள் மாதவிடாய் காலத்தில் வயிற்றுப் பிடிப்பு மற்றும் அதிப்படியான இரத்தப்போக்கினால் கஷ்டப்படுவார்கள். அவர்கள், தினமும் ஊற வைத்த உலர் திராட்சையை நீருடன் எடுத்து வந்தால், மாதவிடாய் பிரச்சனைகளில் இருந்து விரைவில் விடுபடலாம்.

எலும்பு சம்பந்தப்பட்ட பிரச்சனை வராமல் இருக்க வேண்டுமானால், உலர் திராட்சையை அன்றாடம் சாப்பிடுவது நல்லது.



## தினமும் முட்டை சாப்பிடுவது நல்லதா? கெட்டதா?

முட்டை பலருக்கும் பிடித்த உணவாக உள்ளது, உணவில் முட்டை, ஆம்லெட், முட்டை தொக்கு, போன்றவை இல்லாமல் பலருக்கும் சோறு வாய்க்குள் இறங்காது.

தினசரி முட்டை சாப்பிடுவது நல்லதா, கெட்டதா, உடலில் என்ன மாதிரியான மாற்றங்கள் ஏற்படும் என்பது குறித்து காண்போம்.

ஆய்வில் தகவல்

தினமும் சராசரியாக முட்டை எடுத்துக் கொண்டவர்களுக்கு இதய நோய் பாதிப்பு குறைந்துள்ளது ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

முட்டையை தனியாக சாப்பிடும்போது உடலுக்குத் தேவையான சத்து கிடைப்பதுடன் உடல் எடையைக் குறைக்கும். இது உடலில் ஹெச்டிஎல் எனும் அமிலச் சுரப்பை அதிகரித்து கொழுப்பைக் கரைக்கிறது. பசியைக் குறைக்கிறது. கலோரி குறைவு என்பதாலும் உடல் எடை அதிகரிக்காது.

எனவே, முடிந்தவரை மற்ற உணவுடன் முட்டை சேர்த்து சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

தினமும் ஒரு முட்டை

பெரியவர்கள் நாள் ஒன்றுக்கு 2–3 முட்டை தாராளமாக சாப்பிடலாம். குழந்தைகளுக்கும் தினமும் ஒன்று கொடுக்கலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

முட்டையில் உள்ள ஒமேகா 3 ஃபேட்டி ஆசிட் என்பது இதய நோய் அபாயங்களை கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், உடல் உள்ளுறுப்புகள் வீக்கம் ஏற்படுவதை தடுக்க உதவும்.

முட்டையின் மஞ்சள் கருவில், உடலுக்கு கெடுதலை ஏற்படுத்தும் எல்டிஎல் கொழுப்பு இருப்பதாக பரவலாக நம்பப்படுகிறது. ஆனால், உண்மையில் இது உடலுக்கு நன்மை பயக்கும் கொழுப்பு ஆகும். உடலுக்கு நன்மை பயக்கு ஹெச்டிஎல் கொழுப்பு முட்டையில் இருப்பதாக பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



## பண்டிகை காலங்களில் சருமத்தை பளபளப்பாக வைத்துக்கொள்ள டிப்ஸ்

1 வாழைப்பழம், பச்சை பால் மற்றும் தேன் கலந்து மென்மையான பேஸ்ட்டை உருவாக்கவும். இந்த பேஸ்ட்டில் சில துளிகள் ரோஸ் வாட்டர் சேர்த்து முகம் மற்றும் கழுத்தில் தடவவும். 15 நிமிடங்கள் விட்டுவிட்டு சாதாரண நீரில் கழுவி வந்தால் நல்ல பயனை பெறலாம்.

ஒரு பெரிய கிண்ணத்தில் 1/2 கப் மோர் எடுத்துக் அதனை தயிருடன் கலந்து முகத்தில் தடவவும். ஒரு மணி நேரம் அப்படியே இருக்கட்டும். உங்கள் முகத்தை தண்ணீரில் கழுவி வருவது நல்லது.

ஒரு பாத்திரத்தில் 2 டேபிள் ஸ்பூன் கடலை மாவு அல்லது உளுத்தம்பருப்பு, ஒரு சிட்டிகை மஞ்சள் மற்றும் தயிர் சேர்த்து பேஸ்ட் செய்யவும். பேஸ்ட்டை உங்கள் தோலில் சமமாக தடவி 15 முதல் 20 நிமிடங்கள் விடவும். பேஸ்ட் காய்ந்தவுடன், உங்கள் முகத்தை கழுவி வந்தால் மாற்றத்தை பார்க்கலாம்.

ஒரு டீஸ்பூன் பால் பவுடரை எடுத்து இரண்டு டீஸ்பூன் தயிர் சேர்த்து மென்மையான பேஸ்ட்டை உருவாக்கவும். இதனுடன் அரை டீஸ்பூன் எலுமிச்சை சாறு சேர்க்கவும். இந்த பேஸ்ட்டை உங்கள் முகம் மற்றும் கழுத்தில் தடவி 15 - 20 நிமிடங்கள் அப்படியே வைக்கவும். பின்னர், சாதாரண நீரில் கழுவி வந்தால் நல்ல மாற்றத்தை காணலாம்.

ஒரு பெரிய கிண்ணத்தில் பாதி நடுத்தர அளவிலான பப்பாளியை சிறிதுசிறிதாக வெட்டி எடுத்துக் கொள்ளவும். 2 டேபிள் ஸ்பூன் தேன் சேர்த்து நன்கு கலந்து பேஸ்ட்டை உருவாக்கவும். இந்த கலவையை உங்கள் முகத்தில் தடவவும். 15 நிமிடங்களுக்குப் பிறகு உங்கள் முகத்தை தண்ணீரில் கழுவவும். இதனால் பளபளப்பான சருமத்தை பெறலாம்.

# போதைப்பொருள் விழிப்புணர்வு

கடந்தவார தொடர்ச்சி...

புதிதாக அப்பாவனைக்கு அடிமைப்படாமல் இளம் சமுதாயத்தை பாதுகாப்பது என்ற நோக்கிலே அரசாங்கங்கள் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. என்ற போதும் இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பொறுத்தவரை இப்பாவனையை தடுத்து நிறுத்தப் போதுமானதாக இல்லை. எனவே இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமாகிறது. போதைப்பொருள் பாவனை பெண்கள் மத்தியிலும் காணப்படுகின்றன. கடந்த ஆண்டு 10 பெண்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர். இந்த ஆண்டு ஒன்றரை மாத கைக்குழந்தையுடன் தாய் ஒருவர் உள்ளிட்ட 13 பேர் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். குறித்த பெண்கள் போதைப்பொருள் பாவித்தமை, உடைமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள். இந்த வருடத்தில் 05 பெண்கள் போதைக்கு அடிமையானவர்கள் என இனம் காணப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் சட்ட வைத்திய அதிகாரி ஊடாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அதேவேளை தாய் ஒருவரே தனது 11 வயதே நிரம்பிய மகளை போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுத்தி வந்தமை கண்டறியப்பட்டு, தற்போது சிறுமி மீட்கப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறுவர் காப்பகம் ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த சிறுமியின் தந்தை போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கம் அறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், தாயார் சிறுமி மூலம் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதிக்கவல்ல இந்த போதைப்பொருளை முற்றிலுமாக ஒழிக்கும் நடவடிக்கையில் உலக நாடுகள் அனைத்தும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக போதைப்பொருள் கடத்தலுக்காக சில நாடுகள் மரண தண்டனையையும் சட்டமாகப் பிரயோகித்து வருகின்றன. மது பாவனையை குறைக்க முற்படும் திணைக்களங்களாக இலங்கை பொலிஸ் திணைக்களம், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, மது வரித் திணைக்களம், சிறைச்சாலைகள், சுங்கவரித் திணைக்களங்கள், அரச திணைக்களங்கள் காணப்படுகின்றன.

இதேபோல் இலங்கையில் போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்காக போதைத் தடுப்பு பணியகம் ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இந்த முறைகேடான பழக்கத்தை முற்று முழுதாக ஒழிக்க அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும். இந்த போதைப்பொருள் பாவனை சிறுபிராயத்திலியே ஏற்பட்டு விடுவதால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும்.

குறிப்பாக அவர்கள் தனிமையை விரும்பினால், அடிக்கடி பணம் கேட்டால், படிப்பில் நாட்டம் குறைந்தால், நடத்தைகளில் மாற்றம் தெரிந்தால், வழக்கத்திற்கு மாறாக நடவடிக்கை தென்படுமாயின் அவர்களை சற்று கூர்ந்து அவதானிப்பது சிறந்தது. முக்கியமாக இன்றைய இளம் சதாயத்தினர் இணையதளத்தை தங்கள் உலகமாகக் கருதி வாழ்வதால் அடிக்கடி அவர்கள் பார்க்கும் இணையதளங்கள் குறித்து பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டும். இவற்றைத் தவிர சிறுவயதிலிருந்தே கற்றலில் அதிக நாட்டத்தை ஏற்படுத்தல், பத்திரிகை வாசித்தல், விளையாடுதல், இறைவழிபாடு செய்தல் போன்ற பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுத்தல் சிறந்தது. இதன்மூலம் நமது குழந்தைகளை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம். மாறாக அவர்கள் யாராயினும் போதைப்பொருளுக்கு அடிமையாகி விட்டார்கள் எனின் மருத்துவர்களினதும் உள வளத்துணையாளர்களினதும் ஆலோசனைப்படி செயலாற்றுவது நல்ல பலனைக் கொடுக்கும். இது அவர்கள் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பிச் செல்லாமல் இருக்கவும் வழி சமைக்கும். புகைத்தல் பாவனைக்கு கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பது போன்று போதைப்பொருள் பாவனையையும் தடுக்கச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். இருக்கும் சட்டத்தை கடுமையாக்குவதன் அவசியம் இன்றுஏற்பட்டுள்ளது. பொலிஸார், பொதுமக்கள் தொடர்பு செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் நாடு தழுவிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சமுதாயச் சீரழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். தவறினால் எமது தேசத்தினதும், சமுதாயத்தினதும் எதிர்காலம் பேரழிவுக்குள் தள்ளப்பட்டதாகவே அமைந்து விடும்.



ஆறுமணி நேர அற்ப சந்தோஷத்திற்காக தங்கள் வாழ்கையை பணையம் வைக்கும் இளைய சதாயத்தினரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை மீட்பது நம் அனைவரதும் கடைமையாகும். எனவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து போதைப்பொருள் பாவனையில்லாத சமூகத்தை உருவாக்க வேண்டும். அரசாங்கமும் ஊடகங்களும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை குற்றவாளிகளாகவும் பொது மக்களுக்கு அச்சுறுத்தலானவர்கள் என்றும் பிழையாக கருத்தைப் பரப்புகின்றன. அதனால் அனைவரும் அவர்களை குற்றவாளிகளாக்கி ஒதுக்கும் நிலைப்பாடு காணப்படுகின்றது. இந்த மனிதத்தன்மையற்ற செயற்பாடுகள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை மனித உரிமை மீறல்களுக்கு உட்படுத்தப்பட வழிவகுக்கின்றன. அவை பொதுவெளியில் குறைந்தளவிலான கவனத்தையே ஈர்த்துள்ளன. இராணுவத்தால் நடாத்தப்படும் நிலையங்களில், 'சிகிச்சை' என்ற பெயரிலோ அல்லது 'தண்டனை' என்ற பெயரிலோ பரவலாக வன்முறை இழைக்கப்படுகிறது. இந்த மையங்களில் சிகிச்சை பெறுபவர்கள் தங்கியிருக்கும் காலம் முழுவதும் வன்முறை, முறையற்ற நடத்துகை மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு ஆளாகின்றனர். வன்முறைகள் மற்றும் தவறான நடத்துகைகள் தண்டனைக்காக அல்லது காரணமேயில்லாமல் அங்கு தடுத்து வைக்கப்படும் நபர்களின் மேல் இழைக்கப்படுகின்றன. ஏதேனும் பிழை செய்தால் அல்லது எவரேனும் விதிமுறைகளுக்கு கீழ்படியாமல் இருந்தால் அந்த நபர்கள் அடிக்கப்படலாம், வயரால் தாக்கப்படலாம், பலாத்காரமாக அதிகமான புஷ் அப்கள் செய்விக்கப்படலாம் அல்லது வேறு வகையான உடற்பயிற்சிகளை செய்வதற்கும் ஆளாக்கப்படலாம். ஒரு சந்தர்ப்பத்தில் சண்டையில் ஈடுபட்ட நபரொருவர் மூன்று நாட்களுக்கு தான் மரத்தோடு இணைத்து விலங்கிடப்பட்டதாக கூறினார். அத்தருணத்தின் போது அவர் மூன்று நாட்களும் நின்றுக் கொண்டிருக்க நேரிட்டது. சாப்பிடுவதற்கும் கழிப்பறையை பயன்படுத்தவுமே அவர் விடுவிக்கப்பட்டார். உணவு மற்றும் நீர் என்பன அவருக்கு கொண்டு வந்து கொடுக்கப்பட்டதுடன் அவர் உறங்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

போதைப்பொருள் பாவனையைக் குறைக்கும் முகமாகப் பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இருந்தும் இப்பாவனையை முற்றாக ஒழிக்க முடியாதுள்ளது. போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் செயற்பாடுகளை ஒழிக்க அதிக நாடுகள் முயற்சித்தும் இவை இரண்டும் குறைந்தபாடில்லை. இவைகளின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. போதைப்பொருள் கடத்தல் தரை, கடல், வான் மார்க்கமாக நடைபெறுகின்றது. இதனால் அதிக பணத்தை இதில் ஈடுபடுபவர்களும் பெற்று வருகின்றனர். இலங்கை பொலிஸ் திணைக்களம், போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, கரையோர பாதுகாப்புப் பிரிவு, முப்படைகள், மதுவரித் திணைக்களம் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. போதைத் தடுப்புப் பணியகமும் விசேடமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் அரசுகளும் அரச இயந்திரங்களும், அரசியல் பின்புலமும் அரசுசார தனிமனித வல்லாதிக்கங்களின் தொடர்புகள் இல்லை என மறுத்திடவும் முடியாது. போதைப்பொருள் மாபியாக்கள், உலகம் பூராவும் இளவயதினரையே குறிவைத்து தங்களது வியாபாரத்தை திறக்கின்றன. அதிலும் குறிப்பாக பதின்ம வயதினரை போதைக்கு இரையாக்குகின்றார்கள். அந்த வயதில் போதைக்கு அடிமையாக்கிவிட்டால் போதை மாபியாக்களுக்கு அவர் வாழ்நாள் வாடிக்கையாளர். அப்படித்தான் இலங்கையிலும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே போதைப்பொருள் வர்த்தகம் விஸ்தரிக்கப்படுகின்றது. போதைப்பொருள் வியாபாரம் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு உட்படுத்துதல் என்பன பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை இலக்கு வைத்தே நடத்தப்படுகின்றன.

குறிப்பாக பெற்றோரை இழந்த பிள்ளைகள், வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு சென்ற பெற்றோர்களின் பிள்ளைகள், தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லும் மாணவர்கள் என்போரை இலக்கு வைத்தே போதைப்பொருள் பழக்கப்படுத்தப்படுகிறது. போதைப்பொருள் விற்பனை முகவர்கள் முன்னதாக போதைப்பொருளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவற்றை பழக்கப்படுத்தி அவர்கள் போதைக்கு அடிமையான பின்னர், அவர்களுக்கு போதைப்பொருளுக்கான பணத்திற்காக அவர்களையே போதைப்பொருள் வியாபாரிகளாக மாற்றுகின்றார்கள். வடக்கு கிழக்கில் பாடசாலைகளில் இருந்து இடை விலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. போதையுடன் தொடர்புடைய குற்றங்களில் நாளாந்தம் அடையாளப்படுத்தப்படும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை நாளைய பிரளயத்தை கட்டியம் கூறி நிற்கின்றது. நாளைய தலைவர்களாக, துறைசார் நிபுணர்களாக, சமுதாயத்தை தேசத்தையும் நல்வழிப்படுத்தும் முன்னோடிகளாக மாறவுள்ள மாணவர்கள் போதையின் பிடிக்குள் சிக்குவது, தமிழர் தேசத்தை போதைவஸ்து சீரழிக்க வேண்டும் என்ற பௌத்த வல்லாதிக்கத்தின் சிந்தனையின் செயல் வடிவமே. இளைய தலைமுறைப் பிள்ளைகளிடத்தில் தன்னம்பிக்கை குறைதல், படிப்பில் ஆர்வம் குறைதல், விளையாட்டுகளில் ஆர்வம் குறைதல், சோம்பல், சற்று ஆர்வம் குறைந்த தோற்றம், பெற்றோரிடம் வாக்குவாதம் செய்வது, ஆசிரியரிடம் அதிக வாக்குவாதம் செய்வது காணப்பட்டால் கூடிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். வடக்கு - கிழக்கில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள், விற்பனையாளர்கள் என்று அடையாளம் காணப்பட்ட பலரும் வெளிப்படையாக உலாவி வருகிறார்கள். எப்போதாவது ஒரு சிலர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டாலும் அவர்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான வழிவகைகளை பொலிஸார் செய்வதில்லை இவர்களின் கையூட்டல்களும் சுகபோக வாழ்கையுமே அதை தீர்மானிக்கிறது போதைப்பொருட்கள் பாதுகாப்புப் படைகள் நிறைந்த தமிழர் பகுதிகளில் அதிம் கைமாற்றலுடன் கடத்தப்படுகிறது. போதைப்பொருள் கடத்தலுக்காகக் கைது செய்யப்பட்ட பலரும் நீதிமன்றங்களில் நிறுத்தப்படாமலேயே விடுவிக்கப்படுகின்ற காட்சிகள் அடிக்கடி அரங்கேறிய வண்ணம் உள்ளது. தென்னிலங்கை பௌத்த சிங்கள மேலாதிக்க மனநிலையோடு வடக்கு - கிழக்கின் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பை அணுகுகின்றது. அரச கட்டமைப்புகள் விற்பனை முகவர்களுடன் மிக நெருங்கிய உறவு நிலையினையும் பலப்படுத்தி செயற்பட்டு வருகிறது. கடத்தல்காரர்களுடன் இணைந்து செயற்படும் மற்றும் உதவி புரியும் சிறைச்சாலை, சட்ட அமலாக்க மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு விரைவில் தண்டனை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன 2020ஆம் ஆண்டு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழர் பிரதிநிதிகளாக தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த்தேசியம் பேசும் அரசியற் கட்சிகளும் அதன் பிரதிநிதிகளும் அதனுடன் தொடர்பாக இருப்பதும் அதன் ஆதரவுகளும், தமிழ்த்தேசியம் பேசும் கட்சிகளில் இருக்கும் சில சட்டத்தரணிகள், கஞ்சா கடத்தல்காரர்களுக்கும், மாபியாக்களுக்கும் நீதிமன்றங்களில் ஆஜராகி வாதிட்டு விடுவிக்கும் காட்சிகள் தொடர்ச்சியாக அரங்கேறுவதுண்டு.

தமிழர் தேச விடுதலைப் போராட்டம் என்பது, அறத்தில் இருந்து எழுந்தது. அப்படியான அறத்தைப் பேணுவதற்குப் பொருத்தமானவர்கள் என மக்கள் தெரிவாக அதில் இயங்கும் நபர்கள் அறத்தோடு இருக்க வேண்டும். அந்த அறம், கட்சியிலும் அதன் அரசியலிலும் சட்டத்தின் அணுகுமுறையில் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது. சட்டத்தரணிகளின் தொழில் தர்மத்தை பல நேரங்களில்கேள்விக்குள்ளாக்கியும் விடுகிறது. அப்படியான நிலையில், குறைந்தபட்சம் அறத்தினை காக்கும் அரசியலுக்காக அவர்கள் சில நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அதில் முக்கியமானது போதைக்கு எதிராக நிலை. இல்லையென்றால், கண்முன்னாலேயே தமிழ்ச்சமூகம் மோசமாகச் சீரழிந்து போகும். அப்போது அவர்களை அழிக்க வேறு யாரும் தேவை இருக்காது தாங்களாகவே அழிந்து போய்விடுவார்கள். நாம் இன்றைய நிலையில் விரைந்து செயற்படவேண்டிய தருணம். போதைப்பொருள் பாவனைக்கு எதிரான பரந்துபட்ட கட்டமைப்பை உருவாக்கி விழிப்புணர்வை ஏற்படுத்துவது எமது அனைவரினதும் கடமையாகும். அதிகரித்துச் செல்லும் இந்தப் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினரும் முன்வர வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஒத்துழைப்பு நல்குதல் அவசியம். ஆனால் அக்கட்டுப்பாட்டுச் சபை ரகசியம் பேணும் நிலையுடன் செயற்பட வேண்டும். போதைபொருட்கள் பாவிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள், நாட்டுக்குள் கடத்தி வருபவர்கள் யாராக இருந்தாலும் எமக்குத் தெரிந்திருக்கும் பட்சத்தில் போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபைக்கு தெரிவிப்பது நாம் எமது நாட்டுக்கும் எமது சமுதாயத்துக்கும் செய்யும் பேருதவியாகும். யாராவது போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி இருப்பது தெரிந்தால் உடனடியாக மருத்துவமனை, போதைப்பொருட்கள் அடிமைத்தனத்தை போக்கும் இடங்களுக்கு அழைத்துச் சென்று தீவிர சிகிச்சை அளிப்பது முக்கியமானதும் அவசியமானதுமான விடயமாகும்.

நிலவன்

# 18 வருடங்களை கடந்த சுனாமி ஆழிப்பேரலை

18 வருடங்களை கடந்த சுனாமி ஆழிப்பேரலை சுனாமி சில நேரங்களில் பேரலைகள் எனக் குறிப்பிடப்படுகிறது. சுனாமி அல்லது கடற்கோள் அல்லது ஆழிப்பேரலை, கடல் அல்லது பெரிய ஏரி போன்ற பெரிய நீர்ப்பரப்புகளில் சடுதியாகப் பெருமளவு நீர் இடம்பெயர்க்கப்படும் போது ஏற்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அலைத் தொடர்களைக் குறிக்கும். கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி காலையில் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவு அருகே இந்திய பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் ஆழிப்பேரலை என்னும் சுனாமி உருவாகி உலகம் முழுவதும் பல லட்சம் மக்களின் உயிர்களை காவு வாங்கியது. இலங்கையை சுனாமிப் பேரலை தாக்கி 18 வருடங்கள் நிறைவடைகின்றன. 2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி இந்தப் பேரவலம் நிகழ்ந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித நேய ஒருங்கிணைப்பு அலுவலக அறிக்கைகளின் பிரகாரம், இலங்கையின் 13 கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டார்கள். அம்பாறை மாவட்டத்தில் ஆகக்கூடுதலாக 10 ஆயிரத்து 436ற்கு மேற்பட்ட மரணங்கள் நிகழ்ந்தன. இலங்கையில் நிகழ்ந்த மொத்த மரணங்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 322 என சர்வதேச சுனாமி தகவல் நிலையம் அறிவித்துள்ளது. இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவுக்கு அப்பாலுள்ள கடலில் கடும் பூகம்பம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து சுனாமி பேரலை எழுந்து இந்துமா சமுத்திரத்தின் 13 கரையோர நாடுகளைத் தாக்கியது. இந்த இயற்கை அனர்த்தத்தில் மொத்தமாக 2 இலட்சத்து 28 ஆயிரம் பேர் வரை மரணித்தார்கள். இந்தோனேசியாவில் 67 ஆயிரத்திற்கு மேற்பட்டோரும், இந்தியாவில் 16 ஆயிரத்திற்கு மேற்பட்டோரும் மரணத்தைத் தழுவினார்கள். ஆழிப் பேரலை அனர்த்தத்தால் இந்துமா சமுத்திர கரையோர நாடுகளுக்கு ஏற்பட்ட பொருளாதார நஷ்டம் ஆயிரம் கோடி டொலரைத் தாண்டுகிறது. இலங்கையில் சுனாமியின் விளைவாக பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்தார்கள். அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, ஹம்பாந்தோட்டை, காலி, மாத்தறை மாவட்டங்களில் கூடுதல் பாதிப்புக்கள் ஏற்பட்டன. சர்வதேச அமைப்புக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்திருந்தன. பல இலட்சம் பேரை கடலலை காவு கொண்ட அந்த சோக நாளினையும், அதில் உயிரிழந்த உறவுகளையும் நினைவுகூரும் தினமானது திங்கட்கிழமை (டிச. 26) நாட்டின் பல பிரதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. அவை பின்வருமாறு



முல்லைத்தீவு மாவட்ட செயலகம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உதவிப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உயிரிழந்த உறவுகளுக்கு இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டு, அஞ்சலி நிகழ்வுகள் நடந்தேறின. இதில் முல்லைத்தீவு மாவட்ட செயலக மேலதிக மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் உள்ளிட்ட அரச அதிகாரிகள், மத தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட செயலகம்

ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் 18ஆம்ஆண்டுநினைவுதினம் தேசியபாதுகாப்பு தினமாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. ஆரம்ப நிகழ்வாக தேசியக்கொடி ஏற்றப்பட்டதை தொடர்ந்து, அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு, இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது. இ தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரீ.ஏ.சூரியராஜா, மதத் தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

முல்லைத்தீவு

ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டவர்களின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு முல்லைத்தீவு கடற்கரை வீதியில் உள்ள சுனாமி நினைவாலயத்திலும், முல்லைத்தீவு கள்ளப்பாடு மைதானத்திலும், புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலயத்திலும், கள்ளப்பாடு பாடசாலையிலும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. இதன் போது உயிரிழந்தவர்களின் உறவுகள் கதறியழுது கண்ணீர்மல்க, தமது உயிரிழந்த உறவுகளுக்கு மலர் தூவி, தீபமேற்றி உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். அதேவேளை உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி மத வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன. மேலும், இந்த அஞ்சலி நிகழ்வில் பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள், மத தலைவர்கள் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2004ஆம் ஆண்டு இதே நாளில் இடம்பெற்ற ஆழிப்பேரலை (சுனாமி) பேரனர்த்தத்தில் முல்லைத்தீவில் மாத்திரம் 3352 பேர் காவு கொள்ளப்பட்டது. மேலும், பல நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போனதுடன் உடைமைகள், வாழ்விடங்கள் என்பனவும் அழிந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் உயிரிழந்த ஒரு தொகுதி உறவுகளின் உடலங்கள் புதைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள சுனாமி நினைவாலய வளாகத்தில் அன்று (டிச. 26) காலை நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இதில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு

ஆழிப்பேரலை சுனாமி தாக்கம் ஏற்பட்டு 18ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று உணர்வுபூர்வமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. சுமார் 1800 பேர் பலியான திருச்செந்தூர், நாவலடி, டச்பார் போன்ற கரையோர பிரதேசங்களில் உள்ள சுனாமி நினைவுத்தூபிகளில் இறந்தவர்களின் புகைப்படங்களை வைத்து, அவர்களது உறவினர்கள் கதறியழுது மலரஞ்சலி செலுத்தினர். இதில் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இதன் போது மட்டக்களப்பு, அம்பாறை மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் தலைமையில் சமய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கிண்ணியா

கிண்ணியா பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த சுனாமி நினைவுதினமானது கிண்ணியா கடற்கரையில் உள்ள நினைவுத்தூபிக்கு முன்னால் பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தலைமையில் இடம்பெற்றது. இதன் போது கடந்த 2004 டிசம்பர் 26 அன்று ஏற்பட்ட ஆழிப்பேரலையில் உயிர் நீத்தவர்களுக்கான இரு நிமிட மௌன அஞ்சலியும், துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது. இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிண்ணியா கிளை உலமா சபை உறுப்பினர்கள், சூரா சபை உறுப்பினர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். இதேவேளை கிண்ணியா உப்பாறு கடலூர் கோவிலிலும் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கான விசேட பூஜை வழிபாடும், கடல் மாதாவுக்கு கடலில் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது.

சாய்ந்தமருது

சுனாமியால் வெகுவாக பாதிக்கப்பட்ட மக்கள் குடியேற்றப்பட்டுள்ள சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தின் ஹிஜ்ரா மஸ்ஜித்தில் கத்தமுல் குர்ஆன் தமாம் நிகழ்வும் விசேட துஆ பிரார்த்தனையும் பள்ளிவாசலின் தலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.எம்.முஸ்தபா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஹிஜ்ரா மஸ்ஜித்தின் ஆரம்பகால தலைவரும், சாய்ந்தமருதின் முன்னாள் பிரதேச செயலாளரும், சட்ட ஒழுங்கு அமைச்சின் மேலதிக செயலாளரும், தற்போதைய பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினரும், பள்ளிவாசலின் சிரேஷ்ட ஆலோசகருமான அல் ஹாஜ் ஏ.எல்.எம். சலீம் கலந்து கொண்டிருந்தார். கத்தமுல் குர்ஆன் தமாம் மற்றும் விசேட துஆ பிரார்த்தனை நிகழ்வுக்கு சாய்ந்தமருது ஹத்தீப் முஹத்தீன் சம்மேளனத்தின் தலைவரும், சாய்ந்தமருது ஜீம்மா பெரிய பள்ளிவாசலின் பேஷ் இமாமுமான அல்ஹாஜ் எம்.ஐ.எம். ஆதம்பாவா (ரஷாதி) தலைமை வகித்தார். பள்ளிவாசலின் செயலாளர் கே.எம். முகம்மட் சஹீது மற்றும் பொருளாளர் ஏ.எம்.அக்பர் ஆகியோரது வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்களின் இமாம்கள், மதரஸா மாணவர்கள், பிரதேசவாசிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வாழைச்சேனை

சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் உயிர் நீத்த உறவுகளின் 18ஆவது நினைவஞ்சலியும், ஆத்ம சாந்தி வேண்டிய பிரார்த்தனை நிகழ்வுகளும் அன்று(26) பாசிக்குடா கடற்கரையில் நடைபெற்றது. பாசிக்குடா வலம்புரி விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மௌன இறைவணக்கம், நினைவுச் சுடர் ஏற்றல், மத வழிபாடுகள், அன்னதானம் ஆகியன இடம்பெற்றதோடு, தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் இதன்போது வழங்கப்பட்டன. வாழைச்சேனை - கோறளைப்பற்று பிரதேசத்தில் சுனாமி பேரலையினால் 512 பேர் உயிர் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை - மாளிகைக்காடு

அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு, ஜனாஸா நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த துஆ பிரார்த்தனையானது, மாளிகைக்காடு அந்நூர் ஜீம்மா பள்ளிவாசல் கலாசார மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஏ.எல். எம். இம்தியாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சுனாமி நினைவுரையை மௌலவி எம்.ஜவாத் ரஸா பிர்தௌஸ் (அல் ஹாபிழ்) நிகழ்த்தினார். மத்ரஸதுல் இர்ஸ ாதியா அதிபர் அப்துல் கரீம் (அல் ஹாபிழ்) துஆ பிரார்த்தனை செய்தார். மேலும், அந் நூர் ஜீம்மா பெரிய பள்ளிவாசல் பேஸ் இமாம் ஏ.எல்.எம். மின்ஹாஜ், மௌலவி எம்.ஏ.எம். ரியாஸத் உட்பட உலமாக்கள், இர்ஷாதியா குரான் மதரஸா மாணவர்கள் போன்றோர் குர்ஆன் ஓதி தமாம் செய்தனர். மேலும், ஸ்ரீலங்கா அல்-மீஸான் ஃபௌண்டேஷன் ஏற்பாடு செய்த சுனாமி நினைவுதின நிகழ்வுகள் சாய்ந்தமருதில் அமைப்பின் தவிசாளரது தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துஆ பிரார்த்தனை, நினைவுரை, யாஸீன் ஓதுதல், பயான் நிகழ்ச்சி என்பன இடம்பெற்றன.

மாளிகைக்காடு

சுனாமி அனர்த்தத்தின் 18ஆவது ஆண்டு நினைவு தினம் அன்று(26) ளுஹர் தொழுகையை தொடர்ந்து நண்பகல் 1.00 மணியளவில் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜீம்ஆ பெரிய பள்ளிவாசலில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன் போது மரணித்தவர்களின் மறுமை ஈடேற்றத்துக்காக துஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்பட்டது. சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜீம்ஆ பெரிய பள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பொறுப்பாளர் சபையின் செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூர், பொருளாளர் ஏ.ஏ.உஷாம் சலீம் மற்றும் பள்ளிவாசலின் மரைக்காயர்மார்கள், ஜமாஅத்தார்கள், உலமாக்கள் என பலரும் கலந்துகொண்டனர். இவ்வாறாக சுனாமி ஆழிப்பேரலையானது 18 வருடங்களை கடந்த நிலையில் இன்றும் மக்கள் மனதில் நீங்க நினைவுகளுடன் இருப்பதுடன் அந்நினைவுகளுக்கான நிகழ்வுகள் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடதக்கவிடயமாகும்.

**–சப்தகி–**

# உலக வலம்

## இஸ்ரேல் பிரதமராக 6வது முறையாக பெஞ்சமின் நெதன்யாகு

இஸ்ரேல் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு 6ஆவது முறையாக வியாழக்கிழமை (டிச.29) பொறுப்பேற்றார். 73 வயதாகும் அவர், நாட்டில் மிக நீண்ட காலமாக பிரதமராக இருந்தவர் என்ற பெருமையை ஏற்கெனவே பெற்றுள்ளார். கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேல் நாடாளுமன்றத் தேர்தல்களில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், அமைக்கப்பட்ட அரசுகள் அடுத்தடுத்து கவிழ்ந்தன.

இந்த நிலையில், மூன்றே ஆண்டுகளில் 4-ஆவதாக கடந்த நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் நெதன்யாகுவின் கட்சிக்கு 32 இடங்கள் கிடைத்தன. ஆட்சியமைக்க 61 இடங்கள் தேவையான நிலையில், ஏனைய கட்சிகளுடன் இணைந்து அவர் தற்போது ஆட்சியமைத்துள்ளார்.

தற்போது அமைந்துள்ள அரசுதான் நாட்டின் மிகத் தீவிர வலதுசாரிக் கூட்டணி அரசு என்று கூறப்படுகிறது. எனவே, இந்த புதிய அரசு எடுக்கக் கூடிய முடிவுகள் சர்ச்சையை ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது.



## தாய்வானில் கட்டாய இராணுவப் பணி ஓராண்டாக நீடிப்பு!

தாய்வானை சீனா தனது நாட்டின் ஒரு பகுதி என சொந்தம் கொண்டாடி வருகிறது. இதனால் இரு நாடுகளுக்கு இடையே மோதல் போக்கு இருந்து வருகிறது.அண்மையில் தாய்வானை நோக்கி போர் விமானங்களை சீனா அனுப்பியதால் பதற்றம் நிலவி வருகிறது. இந்த நிலையில் சீனாவின் அச்சுறுத்தல் அதிகரித்து வருவதால் தாய்வான் தனது இராணுவத்தை பலப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி தாய்வானில் இராணுவத்தில் கட்டாய பணியாற்றும் காலம் ஒரு ஆண்டாக நீடிக்கப்பட்டுள்ளது.



தாய்வானில் ஆண்கள் 4 மாதங்களுக்கு இராணுவத்தில் கட்டாயமாக பணியாற்ற வேண்டும் என்ற சட்டம் உள்ளது. தற்போது இந்த கட்டாய இராணுவ சேவை ஒரு ஆண்டாக நீடிக்கப்பட்டுள்ளது. ஒரு வருட கட்டாய ராணுவ சேவை 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்றும் 2005-ம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த ஆண்களுக்கு இது பொருந்தும் என்றும் தாய்வான் ஜனாதிபதி சாய் இங்வென் தெரிவித்தார்.

## அபராதத் தொகையை செலுத்தத் தவறிய கூகுள்

ரூ.2,274.2 கோடி அபராதத் தொகையை செலுத்தத் தவறிய கூகுள் நிறுவனத்துக்கு இந்திய தொழில் போட்டி ஆணையம் (சிசிஐ) நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

பல்வேறு சந்தைகளில் ஆண்ட்ராய்ட் கைப்பேசிகள் தொடர்பான வர்த்தகத்தில் நேர்மையற்ற வழியில் செயல்பட்டதாக கூகுள் நிறுவனத்துக்கு சிசிஐ ரூ.1,337.76 கோடி அபராதம் விதித்தது. அத்துடன் பிளே - ஸ்டோர் கொள்கைகளிலும் முறைகேடான செயல்களில் ஈடுபட்டதாக அந்த நிறுவனத்துக்கு சிசிஐ ரூ.936.44 கோடி அபராதம் விதித்தது.

கடந்த அக்டோபர் மாதம் இந்த அபராதங்கள் விதிக்கப்பட்ட நிலையில், அதனை இரண்டு மாதங்களுக்குள் செலுத்துமாறு கூகுளுக்கு சிசிஐ உத்தரவிட்டது. ஆனால் அந்த அபராதங்களை கூகுள் இதுவரை செலுத்தவில்லை. இதையடுத்து அபராதங்களைச் செலுத்த வலியுறுத்தி, அண்மையில் கூகுளுக்கு சிசிஐ நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்திய தொழில் போட்டி சட்டத்தின்படி, இதுபோன்ற நோட்டீஸ் அனுப்பப்பட்டால் ஒரு மாதத்துக்குள் அபராதத் தொகையைச் செலுத்த வேண்டும். அதைச் செய்ய தவறினால், அபராதத்தை வசூலிக்க தனக்குள்ள அதிகாரத்தை சிசிஐ பயன்படுத்த முடியும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக கூகுள் தரப்பில் கூறுகையில், 'இரண்டு அபராத உத்தரவுகளுக்கும் தடை விதிக்க தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அவை தீர்ப்பாயத்தில் இதுவரை விசாரணைக்கு வரவில்லை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய தொழில் போட்டி சட்டத்தின்படி, அபராதத் தொகையை செலுத்த எந்தவொரு தடையும் விதிக்கப்படவில்லையெனில், குறிப்பிட்ட காலத்துக்குள் அந்தத் தொகையை சம்பந்தப்பட்ட நிறுவனம் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## எதியோப்பியாவில் உள்நாட்டு போர் முடிவுக்கு வந்தது

ஆபிரிக்க ஒன்றியத்துடனான ஒப்பந்தம் மூலம் எதியோப்பியாவில் உள்நாட்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடான எதியோப்பியாவின் டைக்ரே பிராந்தியத்தில் கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு போர் நடந்து வந்தது. இந்த போரில் அப்பாவி மக்கள் 600-க்கும் மேற்பட்டோர் கலவரக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டனர். இதனையடுத்து அந்த பகுதியில் நெருக்கடி நிலையை எத்தியோப்பியா அரசு அறிவித்தது.

இதனால் நாட்டின் ஏனைய நகரங்களுடனான போக்குவரத்து வசதி திடீரென துண்டிக்கப்பட்டது. மேலும் தொலைபேசி சேவைகளும் நிறுத்தப்பட்டது. இதனால் அங்கு சிக்கி கொண்டவர்கள் தங்களது சொந்த பகுதிகளுக்கு கூட செல்ல முடியாமல் கடந்த 2 ஆண்டுகளாக தவித்தனர்.

இந்த நிலையில் தற்போது ஆப்பிரிக்க ஒன்றியத்துடனான ஒப்பந்தம் மூலம் உள்நாட்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் அங்கு சிக்கி கொண்டவர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர்.

## இருமல் மருந்தை குடித்ததால் 18 குழந்தைகள் உயிரிழப்பு - உஸ்பெகிஸ்தான் அரசு அறிவிப்பு

இந்தியாவிலிருந்து தயாரித்து அனுப்பப்பட்ட இருமல் மருந்தை குடித்ததால் 18 குழந்தைகள் உயிரிழந்து உள்ளதாக உஸ்பெகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

உஸ்பெகிஸ்தான் நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பின்படி, நுரையீரல் தொடர்பான நோய்களுக்காக சிகிச்சை பெற்று வந்த 21 குழந்தைகளுக்கு இந்தியாவிலிருந்து தயாரிக்கப்பட்ட டாக் ஒன் மேக்ஸ் என்ற இருமல் மருந்தை கொடுத்ததாகவும் இதில் 21 குழந்தைகள் உயிரிழந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

மூன்று முதல் ஏழு நாட்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று முதல் நான்கு தடவை 2.5 எம்எல் என்ற தர அளவில் இருமல் மருந்தை குழந்தைகளுக்கு கொடுத்ததாகவும் அதை குடித்த பின்னர் குழந்தைகள் உயிரிழந்திருப்பதாகவும் அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உஸ்பெகிஸ்தான் நாட்டின் இந்த குற்றச்சாட்டை தொடர்ந்து உத்திர பிரதேச மாநிலத்தின் நொய்டாவில் தலைமையகத்தை கொண்டுள்ள மருந்து தயாரிப்பு நிறுவனத்திடம் விசாரணையை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் உதவியுடன் இந்த விவகாரத்தில் விசாரணை நடத்துவதற்கு உஸ்பெகிஸ்தான் நாடும் முடிவு செய்துள்ளது. ஏற்கனவே காம்பியா நாட்டிலும் இந்தியாவிலிருந்து தயாரித்து அனுப்பப்பட்ட இருமல் மருந்து குடித்து 66 உயிரிழந்ததாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில் தற்பொழுது உஸ்பெகிஸ்தான் நாட்டிலும் அதே குற்றச்சாட்டு எழுந்துள்ளது மிகுந்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. உலக நாடுகளிடையே இந்தியா மீதான அதிருப்தியும் எழுந்திருப்பதாக சொல்லப்படுகிறது.

## தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி லி மியங் - பக்குக்கு பொதுமன்னிப்பு

ஊழல் வழக்கில் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி லி மியங் - பக்குக்கு (81) பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக அவர் உள்பட 1,373 சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுவதாக அரசு தெரிவித்தது. உடல்நலக் குறைவு காரணமாக மியங்-பக் கடந்த ஜூன் மாதமே தற்காலிகமாக விடுவிக்கப்பட்டார்.



## நைஜீரியாவின் ஒகுன் மாகாணத்தில் ஆறு பேர் கொண்ட குடும்பம் ஒரு பல்லியால் பலி!

நைஜீரியாவின் ஒகுன் மாகாணத்தில் ஆறு பேர் கொண்ட குடும்பம் ஒரு பல்லியால் உயிரிழந்துள்ளது. ஜோன் சாமுவேல், அவரது மனைவி, இரண்டு குழந்தைகள் மற்றும் உறவினர்கள் இருவர் ஆகியோரே இந்த துர்ப்பாக்கிய மரணத்தை தழுவியுள்ளனர் .

சில தினங்களுக்கு முன் சாமுவேல் வசித்த வீட்டில் இருந்து சத்தம் வராததால், அக்கம்பக்கத்தினர் கதவை உடைத்து பார்த்தபோது, சாமுவேல் உள்ளிட்டோர் ஒவ்வொரு அறையிலும் இறந்து கிடந்ததாக நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார். இரவு உணவு உண்ட பின்னர் அவர்கள் உயிரிழந்துள்ளதாகவும், உணவில் விஷம் கலந்தமையே மரணத்திற்கு காரணம் எனவும் நைஜீரிய பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது .

அக்கம்பக்கத்தினர் வீட்டைச் சோதித்தபோது சாமுவேல் மற்றும் பலர் இரவு உணவிற்கு எடுத்துச் சென்ற சூப் பானையில் பல்லி இறந்து கிடந்ததாகவும், அந்த பல்லி தான் மரணத்துக்குக் காரணம் என்றும் நைஜீரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 01.01.2023 அன்று வெளியிடப்பட்டது.